கிறிஸ்துவுக்காக மரித்த புதிய ஏற்பாட்டு பக்தர்கள்

எச்.பி.ராஜ்குமார்

ஸ்தேவான்
யாக்கோபு
பர்னபா
லூக்கா
மாற்கு
பிலிப்பு
தீமோத்தேயு
லாசரு
தீத்து

இவர்களின் மனமாற்றம்
ஊழியம்
இரத்தச்சாட்சி மரணம்
பற்றிய
ஆதாரபூர்வமான செய்திகள்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

கிறிஸ்துவுக்காக மரித்த புதிய ஏற்பாட்டு பக்தர்கள்

எச்.பி.ராஜ்குமார்

லிலிமலர் வெளியீடு

H.B. RAJKUMAR
30, 12th Street,
Padi Pudu Nagar,
Anna Nagar West,
CHENNAI – 600 101

லீலிமலர் வெளியீடு - 2
இரத்தச்சாட்சிகள் நூல்வரிசை - 2
புனிதர் ராஜ்குமார் நினைவு வெளியீடு - 103
எச்.பி. ராஜ்குமார் நூல்வரிசை - 32 (73)

© H.B. Rajkumar

First Published, September 1990
Reprinted, October 1990
Reprinted, November 1994
Reprinted, April 1996
This edition, March 1998

லீலிமலர் வெளியீடு

முன்னுரை

'இரத்தச்சாட்சிகளாக மரித்த அப்போஸ்தலர்கள்' நூலில் இயேசுவின் சீடர்கள், பவுல் அப்போஸ்தலன் இவர்களின் அழைப்பு, ஊழியம், குணநலன்கள், பாடுகள், இரத்தச்சாட்சி களாக மரித்தல் இவைபற்றிய முழுமையான செய்திகள் கொடுக்கப்பட்டிருந்தன. புதிய ஏற்பாட்டின் பிற ஊழியர்களான ஸ்தேவான், இயேசுவின் சகோதரராகிய யாக்கோபு, பர்னபா, லூக்கா, மாற்கு, பிலிப்பு, தீமோத்தேயு, லாசரு, தீத்து இவர்களின் மனமாற்றம், ஊழியம், இரத்தச்சாட்சி மரணம் பற்றிய ஆதாரபூர்வமான செய்திகள் இந்த நூலில் கொடுக்கப் பட்டுள்ளன.

இவர்களும் நம்மைப்போல பலவீனமானவர்களாக இருந்தவர்கள்தாம். இவர்களில் சிலர் கிறிஸ்துவின் சத்தியத்திற்கு விரோதமானவர்களாக, அவருடைய பணிக்கு இடறலுண்டாக்கக் கூடியவர்களாகக்கூட இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கிறிஸ்துவால் தொடப்பட்டு, அவரால் அழைக்கப்படும்போது, வெறும் ஆடுகளாக மட்டுமல்ல, மேய்ப்பர் களாகவும் விளங்கும்படி மீட்பர் இயேசு அவர்களுக்கு வல்லமை கொடுத்திருக்கிறார். இந்த நூலைப்படிக்கும் நாமும் திட விசுவாசத்தையும், வல்லமையையும் பெற்று அவருக்காக வாழ முடியும்.

இந்த நூலை எழுதும்படி கிருபையளித்த ஆண்டவருக்கு நன்றிகூறி, இந்த நூல் அனைவருக்கும் ஆசீர்வாதமாக விளங்கும்படி அவரை வேண்டிக்கொள்கிறேன்.

சென்னை
8.9.1990

எச்.பி. ராஜ்குமார்

சிறுவர்களுக்காக [illegible] புதிய ஏற்பாட்டு பக்தர்கள்

1. ஸ்தேவான் ... 5
2. இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபு ... 11
3. பர்னபா ... 22
4. லூக்கா ... 31
5. மாற்கு ... 40
6. பிலிப்பு ... 50
7. தீமோத்தேயு ... 57
8. லாசரு ... 66
9. தீத்து ... 74

1

ஸ்தேவான்

கிறிஸ்தவ உலகில் முதல் இரத்தச்சாட்சியாக மரித்தவர் ஸ்தேவான். இவர் கிரேக்க மொழி பேசும் ஒரு யூதர்! அப்போது எருசலேமில் ஆயிரக்கணக்கான கிரேக்க மொழி பேசும் கிறிஸ்தவர்கள் இருந்தனர்.

ஸ்தேவானின் ஊழியம்

அப்போஸ்தலர் நடபடிகளில் **6:5** முதல் **8:12** வரையுள்ள வசனங்களில் ஸ்தேவானைப் பற்றிய செய்தியைக் காண்கிறோம். இவரது மனமாற்றத்தைப் பற்றியும், கிறிஸ்தவரானது பற்றியும் ஒன்றுமே கூறப்படவில்லை. இவர் 70 சீடர்களுள் ஒருவராக இருக்கலாம்; அல்லது அப்போஸ்தலர்களின் துவக்க கால ஊழியத்தின் பயனாகக் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களில் ஒருவராக இருக்கலாம்.

என்றாலும் ஸ்தேவான் எருசலேம் சபையில் செல்வாக்கு பெற்ற ஒருவராக இருந்தார் என்பதை நாமறிகிறோம். பந்திவிசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஏழு பேரில் ஸ்தேவான் முதலாவதாகக் குறிக்கப்பட்டுள்ளார் (அப். 6:5). கிரேக்க விதவைகளுக்கான அன்றாட உணவு பற்றிக் கவனிப்பது இவர்கள் பொறுப்பாக இருந்தது. இவர்களின் ஊழியத்தின் பலனாக சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று **(6:7)**.

ஸ்தேவான் விசுவாசத்தினாலும், வல்லமையினாலும் நிறைந்தவர் (6:8); பரிசுத்த ஆவியானவரின் நிறைவையும் பெற்றவர். பந்தி விசாரணை ஊழியத்தோடு நின்றுவிடாமல் ஞானத்தோடும், ஆவியின் நிறைவோடும் நற்செய்தியை அறிவித்தார் (6:10). பெரிய அற்புதங்களையும் அடையாளங் களையும் செய்தார் (6:8).

ஸ்தேவான் கைது செய்யப்படுதல்

கிரேக்க மொழி பேசும் யூதருடைய ஆலயங்களில் ஸ்தேவான் கிறிஸ்துவைப் பற்றி சாட்சி கூறிவந்தார். இதனால் அவர்கள் இவருக்கு எதிராக விவாதம்பண்ணத் துவங்கி னார்கள். "அவர் பேசிய ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்து நிற்க அவர்களால் கூடாமற்போயிற்று" (6:10).

இதனால் எரிச்சலுற்ற யூதர்கள் பொய்சாட்சிகளைத் தயார்செய்து, ஸ்தேவானைப் பிடித்து இழுத்து, ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்பாகக் கொண்டுபோனார்கள். பரிசுத்த ஸ்தலத்துக்கும், வேதப் பிரமாணத்துக்கும் விரோதமாகத் தூஷணம் பேசுகிறார் என்று குற்றம் சாட்டினார்கள். தேவ தூஷணம் செய்பவர்களுக்கு மரண தண்டனை அளிக்கப்படக் கூடுமாதலால் (லேவி. 24: 14–16) ஸ்தேவானைக் கொலை செய்யும் நோக்கத்தோடு இவ்வாறு கூறினார்கள். கிறிஸ்துவுக்கு விரோதமாகவும் இதே தேவ தூஷணக் குற்றச்சாட்டையே கூறினார்கள் (மத். 26:65). அவருக்கு விரோதமாகவும் பொய்ச்சாட்சி சொன்னார்கள் (மாற்கு 14:58).

கிறிஸ்தவர்கள் யூத மதக் கலாச்சாரத்தையும் யூதர்களின் தனித்தன்மையையும் அழித்துவிடுவார்கள் என்று அப்போது யூத மதத் தலைவர்களிடையே நிலவிய அச்சத்தின் காரணமாகவே இத்தகைய குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டன.

இவ்வாறு மற்றவர்கள் பொய்சாட்சிகளைச் சொல்லும் போது, ஸ்தேவானின் முகம் தேவதூதன் முகம் போலிருப்பதை

ஆலோசனைச் சங்கத்தார் கண்டார்கள் (6:15). என்றாலும் அவர்கள் மனதைக் கல்லாக்கிக் கொண்டார்கள்.

ஸ்தேவானின் விசுவாச அறிக்கை

ஆலோசனைச் சங்கத்தாரின் நோக்கத்தை நன்கு அறிந்து கொண்ட பின்னரும் ஸ்தேவான் பின்வாங்கவில்லை. விசுவாசத்தில் தளர்ச்சியடையவில்லை.

நற்செய்தியை ஆதாரமாகக் கொண்டு ஸ்தேவான் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்தார். ஒருவேளை அவர்கள் வேத வசனங்களின் சத்தியத்தை ஏற்றுக்கொண்டால் அவர் விடுதலை செய்யப்படுவார். இல்லையென்றாலும்கூட அந்தச் சத்திய வார்த்தைகள் கேட்பவர்கள் ஒரு சிலரின் மனதிலாவது கிரியை செய்யும் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது.

ஸ்தேவானுக்கு எதிராகக் குற்றம் சாட்டியவர்களும் பழைய ஏற்பாட்டு சத்தியங்களை விசுவாசித்தவர்கள்தாம். வேறுபாடு என்னவென்றால் ஸ்தேவான் பழைய ஏற்பாட்டு வரலாற்றை தீர்க்கதரிசன கண்ணோட்டத்தில் எடுத்துரைத்தார். அவர்களோ நியாயப்பிரமாணத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களின் வரலாற்றுபூர்வமான வெளிப்பாடாகவே இயேசு வந்தார் என்றும் யூதர்கள் அவரைக் கொலை செய்தது தவறு என்றும் ஆணித்தரமாக எடுத்துக் கூறினார் ஸ்தேவான். தீர்க்கதரிசனங்களின் வெளிப்பாடுகளை ஒதுக்கிவிட்டு, நீதிபரராக வந்த இயேசுவைக் கொலை செய்த அவர்களே துரோகிகள் என்றும், பாதகர்கள் என்றும் அவர்கள்மீது பதில் குற்றம் சாட்டினார் (7:52). தன்னைக் கொல்லக் காத்திருப்பவர்களின் முன்னால் நின்று அவர்களே குற்றவாளிகள் என்று வேத வசன ஆதாரங்களுடன் அவர் நிரூபித்ததைக் காணும்போது கிறிஸ்துவுக்காகச் சாவின் முன்னால்கூட துணிவுடன் நிற்கும் அவரது விசுவாசம் புலப்படுகின்றதல்லவா?

இரத்தசாட்சி மரணம்

ஸ்தேவான் கூறியதைக் கேட்டவுடன் சங்கத்தினர் கடும் கோபமடைந்தார்கள்; "பல்லைக் கடித்தார்கள்" என்று வேதாகமம் கூறுகிறது (7:54).

இதைக் கண்ட பிறகாவது ஸ்தேவான் மனம் தளர்ந்து போனாரா? இல்லவே இல்லை. தான் விசுவாசித்த கிறிஸ்துவின் மீது காலத்தால் அழிக்க முடியாத விசுவாச அறிக்கை செய்கிறார்:

"அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷ குமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன்" (அப். 7:56).

அவர் விசுவாசித்த கிறிஸ்து அவரைக் கைவிட்டுவிட வில்லை! அந்த வேளையில் அவருக்காகப் பரிந்து பேசுகிறவராக தேவனுடைய வலது பாரிசத்தில் நின்று கொண்டிருந்தார்!

இதைக் கேட்டவுடன் யூதத் தலைவர்களின் கோபம் உக்கிரமாக மாறியது! சட்டப்படியான மரணதண்டனையை அறிவிப்பதைக்கூட மறந்துவிட்டார்கள்! ஸ்தேவானை நகரத்துக்கு வெளியே தள்ளி, அவர்மீது கல்லெறியத் துவங்கி விட்டார்கள்.

நிச்சயமாக மரிக்கப் போகிறோம் என்பதை அறிந்த பின்னரும்கூட அவரது விசுவாசம் சிறிதளவேனும் குறையவே யில்லை. மீண்டும் கிறிஸ்துவின்மீதான தனது விசுவாசத்தை உறுதிப்படுத்துகிறார்:

"கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக் கொள்ளும்" என்று ஜெபிக்கிறார் (7:59).



ஸ்தேவான் கொலைசெய்யப்பட்ட
இடத்துக்கு அருகேயுள்ள ஆலயம் (→)

மரணத்தின் கடைசி நிமிடத்திலும் அவர்களுக்காக ஜெபிக்கிறார்; அவருக்குக் கொடுக்கப்பட்ட கடைசி நொடியிலும் இயேசுவின் வார்த்தைக்கே (பகைவனையும் நேசி) இடம் கொடுக்கிறோம் என்ற மனநிம்மதியோடு சத்தமிட்டு ஜெபிக்கிறார்! மரணத்தை ஏற்றுக் கொள்கிறார்!

அவரது பேச்சினால் தொடப்பட்டவர்களைவிட அவரது இந்தக் கடைசி ஜெபத்தினால் தொடப்பட்டவர்கள் அநேகர் இருந்திருப்பர் என்பது திண்ணம்.

பின்விளைவுகள்

முதல் இரத்தச்சாட்சி மரணத்திற்கு உடனடியாகப் பலன் கிடைத்தது. தொடர்ந்து வந்த சித்திரவதைகளினால் சபை சிதறடிக்கப்பட்டுப் போனாலும், சிதறடிக்கப்பட்டோர் சென்ற இடங்களிலெல்லாம் நற்செய்தி வேரூன்றிப் பலன் தந்தது. ஓடிப் போனவர்கள் ஒளிந்து கொள்ளவில்லை! "சிதறிப்போனவர்கள் எங்குத்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்" (8:4).

ஸ்தேவானின் சாட்சியும், ஜெபமும், இரத்தச்சாட்சி மரணமும் அதைக்கண்ட சவுலின் மனதிலும் கிரியை செய்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அகஸ்டின் கூறுகிறார் — "ஸ்தேவான் ஜெபித்திருக்காவிட்டால், திருச்சபைக்குப் பவுல் கிடைத்திருக்க மாட்டார்."

2

இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபு

இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபு கிறிஸ்துவின் சீடரல்ல; கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் அவரை ஏற்றுக் கொண்டவருமல்ல. என்றாலும் பிற்காலத்தில் அவர் எருசலேம் சபையின் பேராயராகவும், திருச்சபையில் முக்கிய தீர்மானங்களை எடுக்கக்கூடிய செல்வாக்கு மிக்கவராகவும் இருந்தார்!

மனந்திரும்புதலுக்கு முன்பு யாக்கோபு

யாக்கோபு, யோசே, சீமோன், யூதா என்ற இயேசுவின் சகோதரர்களிடையே இவரே மூத்தவர் (மத்தேயு 13:55).

இயேசுவின் சகோதரர்கள் அவரோடு தொடர்பு வைத்திருந்தாலும்கூட அவரைப் பின்பற்றவில்லை; அவர் தேவகுமாரன் என்பதை விசுவாசிக்கவில்லை. அவருடைய அற்புதங்களைக் கண்டிருந்தும், அவர் தேவ வல்லமையால் இப்படிச் செய்கிறார் என்று நம்பவில்லை. "நீர் செய்கிற கிரியைகளை உம்முடைய சீடர்களும் பார்க்கும்படி இவ்விடம் விட்டு யூதேயாவுக்குப் போம். பிரபலமாயிருக்கிற விரும்புகிற எவனும் அந்தரங்கத்திலே ஒன்றையும் செய்யமாட்டான்; நீர் இப்படிப்பட்டவைகளைச் செய்தால் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தும் என்றார்கள். அவருடைய சகோதரரும் அவரை விசுவாசியாதபடியால் இப்படிச் சொன்னார்கள்" (யோவான்

7:3-5). இதனால்தான் யூதர்களின் கூடாரப் பண்டிகைக்கு வரும்படி இயேசுவை வற்புறுத்தினார்கள். வெறும் மாயாஜால வித்தைகளைச் செய்து புகழடைய விரும்புகிற (பிரபலமாயிருக்க விரும்புகிற) ஒருவனைப்போல அவர்கள் தன்னையும் நினைத்து விட்டார்கள் என்று இயேசு உணர்ந்தார். எனவேதான் "உலகம் உங்களைப் பகைக்க மாட்டாது; அதின் கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறதென்று நான் சாட்சிகொடுக்கிறபடியினாலே அது என்னைப் பகைக்கிறது" (யோவான் 7:7) என்று தான் வந்த நோக்கத்தைத் தெளிவாக எடுத்துக் கூறினார். என்றாலும் அவர்கள் அதைப் புரிந்துகொள்ளவில்லை.

தாம் வளர்ந்த நாசரேத்தூரில் தாம் புறக்கணிக்கப் படுவதைக் கண்டபோது, "இயேசு அவர்களை நோக்கி: தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும், தன் இனத்திலும், தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான் என்றார்" (மாற்கு 6:4). யாக்கோபு உட்பட இயேசுவின் சகோதரர்கள் அவரைப் புறக்கணித்திருந்தனர் என்பது தெளிவாகிறது.

இது மட்டுமின்றி அவர் தெளிந்த புத்தியில்லாதவர் என்ற முடிவுக்குக்கூட இவர்கள் வந்திருந்தார்கள். "அவருடைய இனத்தார் இதைக் கேட்டபோது, அவர் மதிமயங்கியிருக்கிறார் என்று சொல்லி அவரைப் பிடித்துக் கொள்ளும்படி வந்தார்கள்" (மாற்கு 3:21).

இயேசு தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார் என்பதை அறிந்தவுடன், அவருடைய சகோதரரும், தாயாரும் வெளியே நின்று அவரை அழைத்துவரும்படி ஆள் அனுப்புகிறார்கள் (மாற்கு 3:31). ஆனால் இயேசுவோ அவர்கள் அழைப்பின் நோக்கத்தை அறிந்திருந்தார். தேவனுடைய சித்தத்தின்படி செய்திறவர்களே தன் உறவினர்கள் (மாற்கு 3:35) என்று கூறி அவர்கள் அழைப்புக்குச் செவிசாய்க்க மறுத்து விட்டார். இவ்வாறு தேவ சித்தத்திற்கு விரோதமாகச் செயல்பட்டு, அவருடைய ஊழியத்திற்கே இடறலாக இருந்தவர்கள்தாம் அவருடைய சகோதரர்கள்!

என்றாலும் சகோதரர்களிடையே விரோத எண்ணம் காணப்படவில்லை. இயேசு யார், அவர் வந்த நோக்கம் என்ன என்பதை அவர்கள் புரிந்து கொள்ளாதவர்களாக மட்டுமே இருந்தார்கள். இது சிறு பிள்ளைப் பருவம் முதல் சேர்ந்து வாழ்ந்ததினால் ஏற்பட்ட அலட்சியத்தின் காரணமாக இருந்தாலும் இருக்கலாம். சுருக்கமாகக் கூறுவோமானால் நட்புறவு இருந்தது; ஆனால் விசுவாசம் இல்லை!

மனமாற்றம் பெற்ற யாக்கோபு

இயேசு சிலுவை மரணத்திற்குத் தம்மை ஒப்புக் கொடுத்தபோது, அவர்கள் தொடப்பட்டிருக்கலாம்; இயேசு உயிர்த்தெழுந்ததைக் கண்டு விசுவாசம் கொண்டிருக்கலாம். அவருடைய சகோதரர்கள் எப்போது மனமாற்றம் அடைந்தார்கள் என்பது தெரியவில்லை.

ஆனால் அவரை அழைப்பதற்குக்கூட அவர் பேசிக் கொண்டிருந்த இடத்திற்கு வராமல் வெளியே நின்று ஆள் அனுப்பிய (மாற்கு 3:31) அவருடைய தாயாரும், சகோதரர்களும் அவர் பரத்துக்கேறின பிறகு சீடர்களோடு மேல்வீட்டில் ஒன்றாகக் கூடுகிறார்கள்! "அங்கே இவர்களெல்லாரும், ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்" (அப். 1:14). கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு விசுவாசிகளோடு ஐக்கியமாகிறார்கள் இவர்கள்.

யாக்கோபுக்கு மேலும் சிறப்பான ஒரு பாக்கியம் கிடைக்கிறது. பவுல் அப்போஸ்தலனைப் போல இவரும் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் தரிசனத்தைப் பெறுகிறார் (1 கொரி. 15:7).

யாக்கோபு ஒரு திட விசுவாசியாகிறார். எருசலேம் சபையோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்கிறார்.

கிறிஸ்துவின் தரிசனத்தைப் பெற்ற ஒரு சிலரில் இவரும் ஒருவர் என்பதின் காரணமாக சபையில் இவர் மதிப்புப் பரவியது எனலாம். என்றாலும் இந்த உண்மை மட்டுமே அவர் முதன்மை நிலையடைந்ததற்கு ஒரே காரணம் என்று கூறிவிட முடியாது.

யாக்கோபு பக்தி நிறைந்த ஒரு யூதனாகவே வளர்க்கப்பட்டிருந்தார். தற்போது சரியான பாதையைக் கண்டு கொண்ட அவர் மேலும் பக்திவைராக்கியத்தோடு கிறிஸ்துவைப் பின்பற்றுவதிலும், நற்செய்தியை அறிவிப்பதிலும் ஆர்வமாக ஈடுபட்டார்; எதிர்ப்புக்களைச் சமாளிப்பதில் ஞானத்தோடு செயல்பட்டு, சீடர்களுக்குக்கூட வழிகாட்டியாக இருந்தார்.

யாக்கோபுவின் குணநலன்கள்

"நீதிமான் யாக்கோபு" என்று அழைக்கப்பட்டவர் இவர். இவரது பரிசுத்தமான வாழ்க்கையையும், பக்தியையும் கண்டு, கிறிஸ்தவரல்லாத யூதர்கள்கூட இவர்மீது அன்பும் மதிப்பும் வைத்திருந்தார்கள்.

யூதர்கள் மெய்யான மேசியாவை அறிந்துகொள்ள வேண்டும்; மீட்படைய வேண்டும் என்று அளவற்ற வாஞ்சை கொண்டிருந்தவர் இவர். அவர்களது மன்னிப்புக்காகவும், இரட்சிப்புக்காகவும் தொடர்ந்து ஆண்டவரிடம் மன்றாடிக் கொண்டிருந்தார். முழங்காற்படியிட்டே அதிக நேரத்தைக் கழித்தபடியால் இவரது முழங்கால்கள் ஒட்டகத்தின் முழங்கால்களைப்போல காரடு தட்டிப் போயிருக்குமாம்!

புறஜாதி கிறிஸ்தவர்கள் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டுமா என்ற பிரச்சினை எழுந்தபோது, எருசலேம் சபையின் பேராயராக இருந்த யாக்கோபு மிகவும் முக்கியமானதொரு முடிவை எடுக்க வேண்டியிருந்தது (அப். 15:13–29). அந்த வேளையில் இவரது பொறுமையும், ஞானமும், தீர ஆலோசித்து முடிவெடுக்கும் திறனும் மிகச் சிறப்பாக வெளிப்படுகிறது. பேதுரு, பவுல், பர்னபா மூவரின்

விவாதங்களையும், அவர்கள் கூறிய செய்திகளையும் முதலில் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தார். தேவ வழிநடத்துதலுக்காக மௌனமாகக் காத்துக் கொண்டிருந்தார். யூத சம்பிரதாயங்களை முழுமையாகக் கைக்கொண்டிருந்த அவர், கிறிஸ்தவர்களல்லாத யூதர்களாலும் மதிக்கப்பட்ட அவர், ஆண்டவருடைய வழிநடத்துதலுக்குத் தன்னை முழுவதுமாக ஒப்புக் கொடுத்தார். புறஜாதி கிறிஸ்தவர்கள் யூத சம்பிரதாயங்களைக் கைக்கொள்ள வேண்டியதில்லை என்ற மிக முக்கியமான தீர்மானத்தை அறிவித்தார். இந்த முடிவே நற்செய்தி உலகெங்கும் பரவ வழிவகுத்தது எனலாம். அப்போஸ்தலர்களுக்கிடையிலும்கூட விவாதங்களையும், குளறுபடிகளையும் ஏற்படுத்திவந்த ஒரு பிரச்சினை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு இடம்கொடுத்துக் காத்திருந்ததே இதற்குக் காரணம் (அப். 15:29).

பேராயரான யாக்கோபு

யாக்கோபு கிறிஸ்தவர்களின் தலைச் சபையாகிய எருசலேம் சபையின் பேராயராக விளங்கினார் என்று வரலாற்றாசிரியர் யூசிபஸ் உறுதிப்படுத்துகிறார்.

அப்போஸ்தலர்கள் பிறபகுதிகளுக்கு நற்செய்தி அறிவிக்கச் சென்றபோது, யாக்கோபு அவர்கள் தலைவராகவும் ஆலோசகராகவும் எருசலேமிலேயே வீற்றிருந்தார். யூதர்களின் தலைமைப் பீடமாகவும், பிரச்சினைகள், துன்பங்களின் இருப்பிடமாகவும் விளங்கிய எருசலேமிலேயே இருப்பதென்றால் யாக்கோபு எவ்வளவு திட விசுவாசம் கொண்டவராக இருந்திருக்க வேண்டும்! ஸ்தேவானின் இரத்தச்சாட்சி மரணத்திற்குப் பிறகு யூதர்களால் துன்பங்கள் ஏற்பட்டு விசுவாசிகள் எங்கும் சிதறடிக்கப்பட்டுப்போன வேளையிலும், யாக்கோபு எருசலேமைவிட்டு நீங்கவில்லை. யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபு ஏரோது ராஜாவினால்

பட்டயத்தினாலே கொலை செய்யப்பட்ட பின்பும் (அப். 12:2) யாக்கோபு எருசலேமைவிட்டு வெளியேறவில்லை. இத்தகைய தொரு அசைக்கமுடியாத தலைமைப்பீடம் இருந்தபடியால்தான் அப்போஸ்தலர்கள் சுற்றித் திரிந்து நற்செய்தியை அறிவிக்க முடிந்தது! ஆலோசனைகளுக்காக எருசலேமில் கூட்டம் கூடிவர முடிந்தது!

பவுல் அப்போஸ்தலன் மனம் திரும்பி, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, எருசலேமுக்குச் சென்றபோது யாக்கோபைச் சந்தித்தார் (கலா. 1:19).

பேதுரு சிறைச்சாலையிலிருந்து அதிசயிக்கப்படத்தக்க விதத்தில் விடுதலை செய்யப்பட்டபோது, இந்தச் செய்தியை "யாக்கோபுக்கும் சகோதரருக்கும் அறிவியுங்கள்" (அப். 12:17) என்று கூறிச் சென்றார்

விருத்தசேதனத்தைப் பற்றிய எருசலேம் மாநாட்டில் ஞானத்தோடு இறுதி முடிவை அறிவித்தவர் யாக்கோபுவே (அப். 15:12–21). அவரே மாநாட்டின் தலைவராகவும் இருந்தார்.

பவுல் அப்போஸ்தலன் கடைசி முறையாக எருசலேமுக்குச் சென்றபோது யாக்கோபுவைச் சந்திக்கச் சென்றார் (அப். 21:18).

யாக்கோபு எழுதிய நிருபம் அவரது அதிகாரத்தையும் செல்வாக்கையும் பெரும் உறுதிப்படுத்துகிறது.

யாக்கோபு எழுதிய நிருபம்

யாக்கோபு எழுதிய நிருபத்தில் இரட்சிப்பைப் பற்றியோ, கிறிஸ்துவின் மனிதப் பிறப்பைப் பற்றியோ, அவருடைய உயிர்த்தெழுதலைப் பற்றியோ ஒன்றுமே கூறப்படவில்லை.

ஏற்கெனவே கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, மீட்பைப் பெற்றவர்கள் பரிசுத்த வாழ்க்கை வாழ வேண்டியதின்

அவசியத்தையும், அதற்கான வழிமுறைகளையுமே இந்த நிருபத்தில் அவர் கூறுகிறார். ''திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" (யாக். 1:22).

தாழ்மை, பரிசுத்தம், நேர்மை, அன்பு இவற்றோடு பொறுமையின் மேன்மையையும் வலியுறுத்துகிறார். "யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்" (யாக். 1:19). எருசலேம் சபையின் விவாதத்தின்போது (அப். 15:12–21) யாக்கோபு இதே குணநலன்களைச் செயல்மூலம் வெளிப்படுத்துவதைக் காண்கிறோம்.

நிருபத்தின் முக்கிய போதனைகள்: சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான் (1:12); மனுஷனுடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்க மாட்டாது (1:20); உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான் (4:4): உள்ளான பிசாசுக்கு எதிர்த்து நிற்க வேண்டும் (4:7); வாசற்படியில் நிற்கும் நியாயாதிபதி அனைத்தையும் அறிவார் (5:9); கர்த்தருடைய வருகை சமீபமாயிருக்கிறது (5:8); ஜெபமே முக்கியமானது, பலனளிப்பது (5:13–18); தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை.

நமது அன்றாட வாழ்க்கையில் நம்மை முழுமையாக ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்து நடக்க வேண்டும் என்பதைத் தெளிவாக எடுத்துக்கூறும் யாக்கோபு தனது வாழ்க்கையிலும் அவ்வாறே வாழ்ந்து காட்டினார்.

யாக்கோபுவின் இரத்தச்சாட்சி மரணம்

யாக்கோபு யூதர்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்தது யூத மதத் தலைவர்களுக்குப் பிடிக்கவில்லை. கிறிஸ்தவ சபைக்கு அவர் ஒரு முக்கியமான தூணாக விளங்கியதையும்

அவர்கள் அறிந்திருந்தார்கள். எனவே அவரைக் கொலை செய்யச் சரியான தருணத்துக்காகக் காத்திருந்தார்கள்.

ரோம ஆளுநராக இருந்த பெஸ்டஸ் திடீரென்று மரித்துப்போனார். அவருக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட அல்பினஸ் இன்னும் பதவியேற்கும்படி வந்து சேரவில்லை.

இந்த வேளையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிட்ட ஆனான் என்ற புதிய பிரதான ஆசாரியன் அவசர அவசரமாக ஆலோசனைச் சங்கத்தைக் கூட்டினான். ஆலோசனைச் சங்கத்தைக் கூட்டும் அதிகாரம் பெற்றிருந்த இரண்டாம் ஏரோது அகரிப்பா இராஜா அப்போது எருசலேமில் இல்லாதிருந்தது அவனுக்கு வசதியாக இருந்தது.

ஆனான் யாக்கோபுவை ஆலோசனைச் சங்கத்தாரின் முன்பு இழுத்துவரச் செய்தான். பொய்ச் சாட்சிகளைக் கொண்டு, யாக்கோபு நியாயப்பிரமாணத்தைப் பழிக்கும் பாவத்தைச் செய்தார் என்று குற்றம் சாட்டினான். அவர் குற்றவாளி என்று தானே தீர்ப்புக் கூறினான்.

ஆனால் மரண தண்டனை அளிப்பதற்கு ரோம ஆளுநருக்கே அதிகாரம் இருந்தது. இதனால்தான் இயேசு ரோமப் பிரதிநிதியாகிய பிலாத்துவிடம் அழைத்துச் செல்லப் பட்டார். ரோம ஆளுநரே இல்லாத இடைப்பட்ட காலமாதலால், ஆனான் தானே அந்த அதிகாரத்தையும் எடுத்துக் கொள்வதாகக் கூறி, யாக்கோபுவுக்கு மரண தண்டனை விதித்தான்.

யாக்கோபு தேவாலயத்தின் உப்பரிகைக்கு இழுத்துச் செல்லப்பட்டார். அங்கிருந்தபடி கிறிஸ்துவை மறுதலிக்குமாறு கீழே கூடியிருந்த விசுவாசிகளைக் கேட்டுக் கொண்டால் அவரை விடுதலை செய்துவிடுவதாகக் கூறி ஆசை காட்டினான் ஆனான்.



எருசலேம் சுவற்றினருகே யாக்கோபு
கொலை செய்யப்பட்ட இடம்

தனது விசுவாசத்தில் திடமாயிருந்த யாக்கோபு அந்தக் கடைசித் தருணத்தையும் பயன்படுத்திக் கொண்டார்.

தேவாலய உப்பரிகையிலிருந்து கிறிஸ்துவுக்குச் சாட்சி பகரத் துவங்கிவிட்டார். அவரது வல்லமையான வார்த்தைகள் கூடியிருந்த யூதர்களின் மனதையும்கூட அசைத்தன.

இதைக் கண்டு கடுங்கோபம் கொண்ட சங்கத்தினர் அவரைக் கீழே தள்ளினார்கள். அரை உயிராகக் கிடந்த அவர்மீது கற்களை வீசினார்கள்.

"ஆண்டவரும், பிதாவுமானவரே, இவர்களை மன்னியும். தாங்கள் செய்வது என்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று எப்போதும்போல அந்த நிலையிலும், அந்த யூதர்களுக்காக ஜெபித்தார் யாக்கோபு.

இதைக் காணப் பொறுக்காத ஒருவன் துணி துவைக்கப் பயன்படுத்தும் உருளைக் கட்டை ஒன்றை எடுத்து வந்து, அவர் தலைமீது ஓங்கி அடித்தான்!

கி.பி. 62–இல் கிறிஸ்துவுக்காகத் தன் ஜீவனை விட்டார் யாக்கோபு.

யாக்கோபு கொலை செய்யப்பட்டது அநேக யூதர்களுக்குப் பிடிக்கவில்லை. அல்பினஸ் ரோம ஆளுநராகப் பதவியேற்றவுடன் அவரிடம் முறையிட்டார்கள். மூன்றே மாதங்கள் பதவியிலிருந்த ஆனான் பதவி நீக்கம் செய்யப்பட்டான்!

வரலாற்றாசிரியர் யூசிபஸ் இந்த நிகழ்ச்சிகளை விவரமாக எழுதி அளித்துள்ளார்.

யாக்கோபுவின் நினைவுச் சின்னங்கள்

ஹேசிர் என்ற வசதிபடைத்த ஆசாரியக் குடும்பத்தினர் யாக்கோபுவின் உடலை எடுத்து, ஒலிவ

மலையின் சரிவிலிருந்த கெதரோன் பள்ளத்தாக்கில் பெரிய கல்லறை ஒன்றில் அடக்கம் செய்தார்கள்.

நான்காவது நூற்றாண்டில் யாக்கோபுவின் சரீரம் இந்தக் கல்லறையிலிருந்து எடுக்கப்பட்டு, அவரது வீட்டிலேயே அடக்கம் செய்யப்பட்டது.

பின்னர் வீடு பாழடைந்தபின்னர் சீயோன் மலைமீது கட்டப்பட்ட புனித யாக்கோபு பேராலயத்திற்கு இவரது சரீரம் கொண்டு செல்லப்பட்டது. முந்நூறு ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்ட பெரிய ஆலயம் இது. இந்த ஆலயத்தின் பலிபீடத்தின் அடியில் யாக்கோபுவின் சரீரம் வைக்கப் பட்டுள்ளது.

சமீபத்தில் எருசலேம் பழைய சுவற்றின் தென்மேற்குப் பகுதியில் அகழ்வாராய்ச்சி செய்தபோது அந்தப் பகுதியில் வண்ணார் துறை இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவர்கள் பயன்படுத்திய உவர் மண்ணும் அங்கு காணப்பட்டது. சிலோவாம் குளத்திலிருந்து இவர்களுக்குத் தேவையான நீர் கொண்டு வரப்பட்டது. யாக்கோபுவைக் கொல்வதற்குப் பயன்படுத்தப்பட்ட வண்ணார் தடி இங்கிருந்தே எடுத்துக் கொண்டு வரப்பட்டது என்று தெரிகிறது. தென்மேற்குச் சுவற்றின் அருகேதான் யாக்கோபு கொல்லப்பட்டார்!

திருச்சபையின் தலைவர்கள், தலைவர்களாகவே பிறந்தவர்கள் அல்ல என்பதை நாம் யாக்கோபின் வாழ்க்கைமூலம் அறிகிறோம். அவர்கள் அவிசுவாசிகளாக இருக்கலாம்; பலவீனர்களாக இருக்கலாம்; கிறிஸ்துவின் சத்தியத்திற்கு விரோதமானவர்களாக, அவருடைய பணிக்கு இடறலுண்டாக்கக் கூடியவர்களாக்கூட இருக்கலாம். ஆனால் அவர்கள் · கிறிஸ்துவால் அழைக்கப்படும்போது, வெறும் ஆடுகளாக மட்டுமல்ல, மேய்ப்பர்களாகவும் விளங்கும்படி அவர்களுக்கு வல்லமை கொடுப்பவர் மீட்பர் இயேசுவே!

3

பர்னபா

"அவன் நல்லவனும், பரிசுத்த ஆவியினாலும், விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாயிருந்தான்; அநேக ஜனங்கள் கர்த்தரிடமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்" (அப். 11:24).

பர்னபாவின் குணநலன்களையும், அவர் ஊழியத்தின் பலன்களையும் பற்றிச் சிறப்பாக விளக்கும் வசனம் இது! அப்போஸ்தலனாகிய பவுலுக்குத் துணையாக ஊழியம் செய்யச் சென்றபோதிலும்கூட பர்னபாவும் ஊழியத்தில் திறமை பெற்றவராகவே விளங்கினார் என்பதை இந்த வசனம் நிரூபிக்கிறது.

அப்போஸ்தலர் 4:36, 37 வசனங்களில் பர்னபா அறிமுகம் செய்யப்படுகிறார்: "சீப்புரு தீவானும் லேவியனும் அப்போஸ்தலராலே ஆறுதலின் மகன் என்று அர்த்தங்கொள்ளும் பர்னபா என்னும் மறுபேர் பெற்றவனுமாகிய யோசே என்பவன், தனக்கு உண்டாயிருந்த நிலத்தை விற்று அதின் கிரயத்தைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்."

ஒரே வாக்கியத்தில்தான் எத்தனை செய்திகள்! பர்னபாவின் உதார குணமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது!

சீப்புரு தீவு மத்திய தரைக் கடலின் நடுவிலிருக்கும் ஒரு தீவு. இதன் கிழக்குக் கடலோரத்திலிருந்த சாலமி பட்டணத்தைச் சேர்ந்தவர்தான் பர்னபா. இவரது இயற்பெயர் யோசே. அப்போஸ்தலர்களால் "ஆறுதலின் மகன்" என்று

பொருள்படும் பர்னபா என்று பெயரிடப்பட்டு அழைக்கப்படுகிறார். ஊழியத்தின் கஷ்டங்களினால் சோர்ந்திருக்கும் பொழுது, அவர்களுக்கு ஆறுதலளித்து, ஊக்கப்படுத்தியதினால் அவர் இந்தப் பெயரைப் பெற்றார். வரலாற்றில் பார்க்கும்போது, ஆதரவில்லாதவர்களுக்கும், ஏழைகளுக்கும் உதவுவதில் பர்னபா மிகவும் ஆர்வம் கொண்டிருந்தார் என்று காண்கிறோம். பஞ்சத்தில் அவதியுறும் சகோதரருக்கு உதவியாகப் பணம் சேகரிப்பதில் அவர் ஆர்வமாக ஈடுபடுவதையும், அவற்றைக் கொண்டு சேர்ப்பதையும் அப்போஸ்தலர் 11:29,30 வசனங்கள் வெளிப்படுத்துகின்றன.

குறுகிய மனப்பான்மையும், சந்தேக குணமும் இல்லாத கிருபை நிறைந்த மனிதர் பர்னபா! இவரது இயல்பிலேயே மன்னிக்கும் குணம் இருந்தது. மற்றவர்களைப் பற்றிக் குறை கூறுவதைவிட, அவர்களுடைய சிறப்பான இயல்புகளைக் கண்டு ஊக்குவிப்பதில் வல்லவராக இருந்தார் இவர்! பன்னிரு சீடர்களில் ஒருவராக இல்லாதிருப்பினும்கூட, பல நாடுகளில் சுவிசேஷம் வேரூன்றுவதற்கு இவரது ஊழியம் பயன்படுத்தப்பட்டது, இவரது நற்குண இயல்புகளினாலும், விசுவாசத்துடன் தம்மைப் பரிசுத்த ஆவியானவருக்கு ஒப்புக் கொடுத்ததினாலுமே எனலாம்!

மாற்கு என்னும் பெயர்கொண்ட யோவான் பர்னபாவின் உறவினன் (கொலோ. 4:10). எருசலேமிலிருந்த மாற்குவின் வீட்டில்தான் அப்போஸ்தலர்கள் அடிக்கடி கூடி ஜெபிப்பது வழக்கம் (அப். 12:12). எனவே பர்னபாவுக்கு அனைவருடனும் பழகுவதற்கு வாய்ப்புக் கிடைத்தது. எருசலேம் சபையில் பர்னபா ஒரு முக்கியமான ஊழியராக விளங்கினார்.

வேதாகமத்தில் பர்னபா

கிறிஸ்துவால் அழைக்கப்பட்டு மனந்திரும்பிய சவுலை எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்களுக்கு அறிமுகம் செய்து

வைத்தது பர்னபாவே (அப். 9:27). கிறிஸ்து சவுலை அழைத்ததற்கும், சவுலின் ஊழிய வாழ்க்கைக்கும் பர்னபாவே சாட்சியாக விளங்கினார். அவரது வார்த்தைகள் எருசலேம் சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டன! சவுல், பவுலாக ஊழியம் செய்யத் துவங்குவதற்கு பர்னபா இவ்வாறு பெரிய உதவியைப் புரிந்துள்ளார்!

அந்தியோகியா பட்டணத்தில் சீடர்களின் முயற்சியால் நற்செய்தி பரவியது! அநேகர் விசுவாசிகளானார்கள். இதைக் கேள்விப்பட்ட எருசலேம் சபையார் அவர்களுக்கு மேலும் உற்சாகமூட்டவும் விசுவாச பாதையில் தொடர்ந்து முன்னேறும்படி புத்தி புகட்டவும் பர்னபாவைத் தேர்ந்தெடுத்து அந்தியோகியாவுக்கு அனுப்பினார்கள் (அப். 11:19–26). பர்னபா தனது நல்ல நடத்தையினாலும், விசுவாசத்தினாலும், பரிசுத்த ஆவியின் நிறைவாலும் இன்னும் அநேகரைக் கிறிஸ்துவண்டை இழுத்து வந்தார் (அப். 11:24).

கிறிஸ்துவால் அழைக்கப்பட்ட சவுல் (அப். 26:18) இந்த நற்செய்திப் பணியில் உறுதுணையாயிருப்பார் என்று நம்பிய பர்னபா, சவுலைத் தேட தர்சுக்குச் சென்று, அவரைக் கண்டு, அந்தியோகியாவுக்கு அழைத்து வந்தார். சவுலுக்குச் சபை ஊழியத்தில் பங்குகொள்ள வாய்ப்புக் கொடுக்கப்பட்டது. இருவருமாக ஓராண்டு காலம் சபையைக் கட்டி வளர்த்தனர். முதன் முதலாக சபையாருக்கு "கிறிஸ்தவர்கள்" என்ற பெயர் வழங்கப்பட்டது!

இவ்வேளையில் யூதேயா பகுதியிலுள்ள சகோதரர்கள் பஞ்சத்தினால் துயரப்படுகிறார்கள் என்ற செய்தி வந்தது. சவுலும், பர்னபாவும் சபையாரோடு இணைந்து நிதி திரட்டுவதில் வெற்றி பெற்றார்கள்! சபையின் சார்பாக அவர்களே பணத்தை எருசலேமுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்ற பொறுப்பும் அளிக்கப்பட்டது (அப். 11:30).

ஏரோது ராஜா இறந்த பிறகு, தங்கள் தர்மப் பணியை முடித்துவிட்டு, பர்னபாவும், சவுலும் அந்தியோகியாவுக்குத் திரும்பும்போது மாற்குவையும் உடன் கூட்டிக்கொண்டு வந்தார்கள் (அப். 12:25).

முதல் அருட்பணியாளர்கள்

பர்னபாவும், சவுலும் முதல் கிறிஸ்தவ அருட் பணியாளர்களாக பரிசுத்த ஆவியானவரால் தெரிந்தெடுக்கப் படுகிறார்கள் (அப். 13:2). சபை மூப்பர்கள் அவர்கள்மேல் கைகளை வைத்து அபிஷேகம்பண்ணி அனுப்புகிறார்கள். பரிசுத்த ஆவியானவர் அவர்களை வழிநடத்தினார். கி.பி. 45–ல் இந்த முதல் அருட்பணி பயணம் துவங்கியது. பர்னபா, சவுல் இருவருமே அப்போஸ்தலர்கள் என்று அழைக்கப்பட்டார்கள் (அப். 14:14).

பர்னபாவின் சொந்த இடமான சீப்புரு தீவின் சாலமி பட்டணத்தில் தங்கள் அருட்பணியைத் துவக்கினார்கள். மாற்குவும் இவர்களுக்கு உதவியாளனாக உடன் சென்றிருந்தான். கி.பி. 45–ல் இங்கு சபை நிறுவப்பட்டது. துவக்கத்தில் இந்தக் குழுவுக்கு பர்னபாவே தலைவராக இருந்தாரென்பதும், பின்னர் பவுல் அப்போஸ்தலன் தனது திறமையின் காரணமாக முதலிடத்திற்கு வந்தார் என்பதும் வசனங்களின் மூலம் வெளிப்படுகிறது. அப்போஸ்தலர் நடபடிகள் நூலை எழுதிய லூக்கா முதலில் பர்னபாவும், சவுலும் என்று பர்னபாவுக்கு முதலிடம் கொடுக்கிறார் (அப். 13:7). பவுல் என்று பெயர் மாற்றம் பெற்றபின்பு "பவுலும் அவனைச் சேர்ந்தவர்களும்" (அப். 13:13) என்று குறிப்பிடுகிறார்!

சீப்புரு தீவுக்குப் பின்னர் மீண்டும் கடல் கடந்து ஆசியா மைனர் பகுதிக்கு வந்து பணியைத் தொடர்ந்தார்கள். பெர்கே பட்டணத்தில் மாற்கு அவர்களை விட்டுப் பிரிந்து எருசலேமுக்குத் திரும்பிவிட்டான். மாற்கு பாதியிலேயே

திரும்பியதற்குக் காரணம் தெரியவில்லை. என்றாலும் பவுல் அப்போஸ்தலனுக்கு அவனது செய்கை பிடிக்கவில்லை!

பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியாவில் பவுல் தனது முதல் நீண்ட பிரசங்கத்தைச் செய்வதைக் காண்கிறோம் (அப். 13:14–41). பவுல் ஏற்கெனவே யூத வேத சாஸ்திரங்களைப் பற்றிக் கற்றறிந்திருந்தாலும், உடன்சென்ற பர்னபா அவருக்குக் கிறிஸ்துவைப்பற்றிய அநேக செய்திகளைத் தெரிவித்திருப்பார் என்பதில் ஐயமில்லை. பர்னபா லேவியரானபடியால் அவரும் வேத சாஸ்திரங்களைக் கற்றிருப்பார். என்றாலும் திறமை வாய்ந்த பவுலுக்கு இடம் கொடுத்து, தான் முதன்மையானவன், பெரியவன் என்ற பெருமை கொள்ளாமல், பின்னணியில் நின்று பவுலுக்கு ஊக்கமளிப்பதில் அவரது நற்குணம் வெளிப்படுகிறதல்லவா?

பின்னர் இக்கோனியா, லீஸ்திரா, தெர்பை, பெர்கே, அத்தலியா பட்டணங்களில் சபைகளை நிறுவி, விசுவாசிகளைப் பலப்படுத்திய பின்னர் கி.பி. 48-ல் தங்கள் முதல் பயணத்தை முடித்துவிட்டு அந்தியோகியாவுக்குத் திரும்பி வந்தனர். அங்கே விசுவாசிகளோடு குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள் தங்கியிருந்தனர்.

இரட்சிப்படைவதற்கு யூத சம்பிரதாயமான விருத்த சேதனம் தேவையென்ற பிரச்சினை எழும்பியபோது இதற்கு ஒரு முடிவு காண பவுலும், பர்னபாவும் எருசலேமுக்குச் சென்றார்கள். அங்கு பவுலும், பர்னபாவும் புற ஜாதிகளிடையே தாங்கள் செய்த ஊழியத்தையும், அதன் பலன்களையும் விவரித்தார்கள். புற ஜாதியாருக்கும் நற்செய்தி அறிவிக்க வேண்டும்; ஏனெனில் இரட்சிப்பு அனைவருக்கும் பொதுவானதே; யூத சம்பிரதாயங்களுக்காக அவர்களைக் கட்டாயப்படுத்தக் கூடாது போன்ற முக்கியமான முடிவுகள் இந்த எருசலேம் சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டன (அப். 15:1–29). இன்றும் வேகமாக உலகெங்கும் சுவிசேஷம் பரவ இந்த முடிவுகள் ஆதாரமாக அமைந்தன. புற

ஜாதியாருக்கு நற்செய்தி அறிவிக்க பவுலும், பர்னபாவும் மீண்டும் அனுப்பப்பட்டார்கள் (கலா. 2:9). யூதா, சீலா என்ற இருவரும் அவர்களுடன் அந்தியோகியாவுக்கு வந்தார்கள்.

பர்னபாவும், மாற்குவும் !

இரண்டாவது அருட்பணிப் பயணம் புறப்பட பவுலும், பர்னபாவும் ஆயத்தம் செய்தார்கள். பர்னபா, மாற்குவை உடன் அழைத்துச் செல்ல விரும்பினார். ஆனால் பவுலோ அவன் பாதியிலேயே பிரிந்துசென்றுவிட்டபடியால் கூட்டிச் செல்லக் கூடாது என்று வாதிட்டார். இதைப்பற்றி அவர்களுக்குள்ளே கடுங்கோபமூண்டது (அப். 15:39). பவுலும், பர்னபாவும் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்தார்கள்! இந்த இடத்தில் இருவருமே அப்போஸ்தலர்களைப்போல நடந்து கொள்ளவில்லை என்றே கூற வேண்டும்!

பவுல் சீலாவை அழைத்துக்கொண்டு பயணத்தைத் தொடர்ந்தார். பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டு கப்பல் ஏறி, சீப்புரு தீவை அடைந்தார். ஒருவகையில் பர்னபா மாற்குவுக்கும், அவர் மூலம் சபைக்கும் பெரிய நன்மை செய்துள்ளார் என்றே கூறலாம்! ஏதோ காரணமாக பின்வாங்கிப் போன மாற்குவுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பைக் கொடுத்தார் பர்னபா; ஊக்கமளித்தார்; நம்பிக்கையூட்டி உற்சாகமளித்தார். இதன் பயன் என்ன ? மாற்கு மாபெரும் அருட்பணியாளராக வளர்ச்சியடைந்தார்; நான்கு சுவிசேஷங்களிலும், முதலாவதாக சுவிசேஷத்தை எழுதியவர் என்ற பெருமை பெற்றார்; பேதுருவுக்குத் துணையாகப் பல துன்பங்களைச் சகித்தார்; இறுதியில் யாரால் குறை கூறப்பட்டாரோ அதே பவுல் அப்போஸ்தலனால் "ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன்" (2 தீமோ. 4:11) என்ற பாராட்டைப் பெற்றார். பர்னபா மட்டும் மாற்குவுக்கு ஊக்கமளிக்காமல் கைவிட்டிருந்தால் மாற்கு இந்த மேன்மையை அடைந்திருக்க

முடியும் என்பது ஐயமே. பின்வாங்கிப் போகும் ஊழியர்களைக் குறைகூறி ஒதுக்காமல் அவர்களை ஆதரித்து ஊக்கமூட்டினால் அவர்கள் முன்னிலும் மேலான நிலையை அடையும்படி செய்ய முடியும் என்பதை பர்னபா நிரூபித்துக் காட்டுகிறார்.

வேதாகமத்தில் பர்னபாவைப் பற்றிய செய்திகள் இத்துடன் முடிவடைகின்றன!

பிற்கால ஊழியம்

சீப்புரு தீவுக்குத் திரும்பிச் சென்ற பர்னபா அங்கு ஏற்கெனவே அவரும் பவுலும் நிறுவியிருந்த சபைகளைப் பலப்படுத்தினார். மாற்கு அவருக்கு உறுதுணையாக இருந்தார். சிறிது காலத்திற்குப் பின்பு மாற்கு எருசலேமுக்குத் திரும்பினார். முதலில் பேதுருவுக்கும், பின்னர் பவுலின் கடைசிக் காலத்தில் அவருக்கும் உடன் ஊழியராக இருந்தார் மாற்கு!

ரோம் நகரில் பேதுருவும், பவுலும் இரத்தச் சாட்சிகளாக மரித்த பின்பு அங்கிருந்த விசுவாசிகள் சிதறுண்டு போகத் துவங்கினார்கள். அவர்களுக்கு ஆறுதலளித்து உற்சாகமூட்டும்பொருட்டாக ரோம் நகருக்குச் சென்றார் பர்னபா. அங்கு அவர் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டார் என்றும், கிறிஸ்தவர்களிடையே ஏற்பட்ட பிரிவுகளைச் சரிப்படுத்தினார் என்றும் ரேனான் கூறுகிறார்.

மீண்டும் கிறிஸ்தவர்கள் ரோம் நகரில் கொடுமையாகச் சித்திரவதை செய்யப்பட்டபோது, தப்பியோடிய கிறிஸ்தவர்களோடு சென்ற பர்னபா எபேசு பட்டணத்தில் தங்கினார். அடைக்கலம் புகுந்த விசுவாசிகளைப் பலப்படுத்தும்படி பர்னபா இங்கிருந்தபடி 'எபிரேய நிருபத்தை' எழுதினார் என்று ரேனான் கூறுகிறார். இரத்தச்சாட்சிகளாக மரித்த உடன் ஊழியர்களை பர்னபா இந்த நிருபத்தில் நினைவுகூருகிறார். பின்வாங்கிப்போன விசுவாசிகளைக் கடிந்து கொள்கிறார். சபைகூடிவருதலை விட்டுவிடுவதின் அபாயத்தைக் கூறி

எச்சரிக்கிறார். சுவிசேஷத்தின்மீது விசுவாசம், ஜெபம், சமாதான உணர்வு, பரிசுத்தம், விழித்திருத்தல், கீழ்ப்படியும் மனம், அந்நியரை உபசரித்தல், கிறிஸ்துவினிமித்தம் நிந்தைகளைச் சகித்தல் இவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். மெய்யான பிரதான ஆசாரியனாகிய கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசம் நம்மைக் காக்க வல்லது என்று வெளிப்படுத்துகிறார். எண்ணிறந்த துயரங்களையும், சித்திரவதைகளையும் சகிக்க வேண்டிய நிலையிலிருந்த விசுவாசிகளுக்கு இவரது கடிதம் ஆறுதலையும், நம்பிக்கையையும் அளித்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

பர்னபா எபேசு பட்டணத்திலிருந்தபோது, தீமோத்தேயு கொரிந்து பட்டணத்தில் சிறை வைக்கப்பட்டிருந்தார். அப்போஸ்தலனாகிய பவுலோடு இருந்த காலத்தில் பர்னபா தீமோத்தேயுவை நன்கு அறிந்திருந்தார். தீமோத்தேயுவுடன் இணைந்து மீண்டும் ரோமாபுரியில் நற்செய்தியைப் பரவச் செய்ய வேண்டும் என்று விரும்பினார் பர்னபா. சில மாதங்களுக்குப் பின்னர் தீமோத்தேயு விடுதலை செய்யப் பட்டார். என்றாலும் பர்னபாவின் வாஞ்சை நிறைவேறவில்லை!

தீமோத்தேயுவை எபேசு சபையின் கண்காணிப்பாள ராக அமர்த்திவிட்டு மீண்டும் சீப்புரு தீவிற்குத் திரும்பினார் பர்னபா.

மரணமும் நினைவுச் சின்னங்களும்

சீப்புரு தீவிலிருந்த யூதர்கள் சபைகளின் வளர்ச்சியைக் கண்டு கோபம் கொண்டிருந்தார்கள். பர்னபா தீவுக்குத் திரும்பியவுடன் அவரைப் படுகொலை செய்தார்கள். பர்னபா இரத்தச்சாட்சியாக மரித்தார்.

மாற்கு எவருக்கும் தெரியாமல் அவரது சடலத்தை எடுத்து வந்து சாலமி பட்டணத்துக்கு வெளியே கற்களினாலான ஒரு கல்லறையில் அடக்கம் செய்தார். பின்னர் அந்த

கல்லறையின் அருகே எயில் பர்னபா என்ற மடாலயமும் கட்டப் பட்டது.

கி.பி. 477-ல் கான்ஸ்டானியா (சாலமி) யின் தலைமைப் பேராயராக இருந்த அந்தெமியோஸ் மடாலயத்தின் அருகே பர்னபாவின் கல்லறையைக் கண்டுபிடித்தார். உள்ளே திறந்து பார்த்தபோது பர்னபாவின் நெஞ்சின்மீது மாற்கு சுவிசேஷத்தின் கையெழுத்துப் பிரதி இருப்பதைக் கண்டார். இது பர்னபா தன் கைப்பட எழுதிய பிரதியாகும்.

இந்தக் கையெழுத்துப் பிரதியை கான்ஸ்டான்டி நோபிளில் பைசாண்டியப் பேரரசராக இருந்த ஜீனோ (474–491) விடம் கொடுத்து, சீப்புரு தீவிலிருந்த கிரேக்க ஆர்தோடெக்ஸ் சபைக்காக அநேக புதிய சலுகைகளைப் பெற்றுக் கொண்டார்.

அந்தெமியோஸ் பர்னபாவின் சடலத்தை ஒரு பளிங்குக் கல்லறையில் வைத்து, அருகே ஒரு ஆலயத்தைக் கட்டினார்.

சராசென் படையெடுப்பின்போது பர்னபாவின் கபால எலும்பு மிலானுக்குக் கொண்டு செல்லப்பட்டது. பின்னர் அங்கிருந்து பிரான்ஸ் நாட்டிலுள்ள தௌலோசுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. தற்போது இந்தக் கபால எலும்பை தௌலோசிலுள்ள புனித செர்னின் ஆலயத்தில் காணலாம்.

மற்றவர்களின் பலவீனங்களைச் சுட்டிக்காட்டி, அவர்கள் மேலும் பின்வாங்கும்படி செய்யாமல், அவர்கள் அந்தப் பலவீனங்களிலிருந்து விடுபடும்படி ஊக்கமும், உற்சாகமும் அளிப்பது ஓர் ஊழியனின் கடமை என்பதை பர்னபா தனது வாழ்க்கையின் மூலம் நமக்கு அறிவுறுத்துகிறார்.

"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்" (எபி. 11:6).

4

லூக்கா

"பிரியமான வைத்தியன்" என்று அன்போடு அழைக்கப்பட்ட லூக்கா புதிய ஏற்பாட்டிலேயே வேறு எவரையும் விட மிக அதிகமான பக்கங்களை எழுதியவர் என்ற தனிச் சிறப்பைப் பெற்றவர். என்றாலும் இவர் இயேசுவானவரை நேருக்கு நேர் சந்தித்தவரல்ல!

லூக்கா புறஜாதியைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவர். இவர் மருத்துவக் கல்வியை மட்டுமின்றி, மொழிகளையும், இலக்கியங்களையும் நன்கு கற்றறிந்தவர். லூக்கா சுவிசேஷத்தின் கிரேக்க மூலம் ஒரு கிரேக்க இலக்கியமாக மதிக்கத்தக்கது என்பது மொழி வல்லுநர்களின் கருத்து! லூக்கா சுவிசேஷத்தைப் போன்று அழகும், கட்டமைப்பும் கொண்ட நூல் உலகிலேயே வேறு எதுவும் கிடையாது என்பது இலக்கிய மேதைகளின் கூற்றாகும்!

லூக்கா சீரியாவிலுள்ள அந்தியோகியாவில் பிறந்தவர் என்று கருதப்படுகிறது. இவர் தீத்துவின் சகோதரன் (2 கொரி. 12:18) என்று கூறுகிறார்கள். புதிய ஏற்பாட்டு நாட்களில் இவர் பிலிப்பி பட்டணத்தில் வசித்து வந்தார்.

கிறிஸ்தவ உலகின் முதல் மருத்துவ அருட்பணியாளர் இவர். இவரது நூல்களில் மருத்துவச் சொற்கள் அதிகமாக இடம் பெற்றுள்ளன.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

பவுல் அப்போஸ்தலன் மீண்டும் மக்கெதோனியா வழியாக வரும்வரையில் லூக்கா அங்கேயே தங்கியிருந்தார். அப்போஸ்தலர் 20:6 ஆம் வசனத்திலிருந்து லூக்கா மீண்டும் அவர்களுடன் சேர்ந்துகொண்டதை (தங்கியிருந்தோம்) அறிகிறோம்.

துரோவா பட்டணத்தில் அவர்கள் ஏழு நாட்கள் தங்கியிருந்தார்கள் (20:6). அங்கே பவுல் அப்போஸ்தலன் மரித்துப்போன ஐத்திகுவை உயிரோடு எழுப்பினார் (20:12). மரித்தவன் உயிரோடு எழுப்பப்படும் அதிசயத்தை முதன் முதலாக லூக்கா இங்கேதான் கண்கூடாகக் கண்டார்.

பவுல் அப்போஸ்தலன் ஆசோ பட்டணம்வரை நில வழியாகச் செல்ல விருப்பப்பட்டபோது, லூக்காவும் மற்றவர்களும் கடல்வழியாக ஆசோ பட்டணம் சென்று அங்கே அவருக்காகக் காத்திருந்தார்கள் (20:13).

மிலேத்து பட்டணத்தில் பவுல் அப்போஸ்தலன் எபேசு சபை மூப்பர்களைக் கூப்பிட்டனுப்பி, அவர்களுக்குக் கொடுத்த அறிவுரைகளை லூக்கா அப்படியே கொடுத்துள்ளார் (அப். 20:18–35).

பவுல் அப்போஸ்தலன் எருசலேமுக்குச் சென்றால் அங்கே கைது செய்யப்படலாம் என்று அனைவரும் சந்தேகம் கொண்டிருந்தார்கள். அவரேகூட அதைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார் (அப். 20:22). அவர்கள் செசரியா பட்டணத்தில் பிலிப்பு என்னும் சுவிசேஷகனுடைய வீட்டில் தங்கியிருக்கும்போது, அகபு என்னும் பெயர் கொண்ட தீர்க்கதரிசி பவுல் எருசலேமில் கைது செய்யப்படுவார் என்பதைத் தீர்க்கதரிசனமாக அறிவித்தான். அப்போது லூக்காவும், மற்றவர்களும் எருசலேமுக்குப் போக வேண்டாம் என்று பவுல் அப்போஸ்தலனிடம் வேண்டிக் கொண்டார்கள் (அப். 21:12). அவர்கள் அவருக்காக அழுதார்கள் என்பதையும் அறிகிறோம் (வச. 13).

ஆனால் பவுலோ இரத்தசாட்சியாக மரிப்பதற்கும் தான் தயாராக இருப்பதாக அறிவித்துவிட்டான். எனவே மற்றவர்கள் கர்த்தருடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று முடிவுக்கு வந்தார்கள்.

இதன்பின்னர் அனைவருமாக எருசலேம் வந்து சேர்ந்தனர் (அப். 21:17). "சகோதரர் எங்களைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டார்கள்" என்று லூக்கா அறிவிக்கிறார். அவர் எருசலேமுக்கு வந்தது இதுவே முதன்முறையாகவும் இருக்கலாம்!

பவுல் எருசலேம் தேவாலயத்துக்குச் சென்றபோது, யூத மக்கள் அவனைப் பிடித்துக்கொண்டு ஆலயத்துக்கு வெளியே கொண்டு வந்தார்கள். அவர்கள் அவனைக் கொலைசெய்யத் திட்டமிட்டார்கள். அவனை அடித்துச் சித்திரவதை செய்தார்கள். இந்தக் கலகத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட சேனாதிபதி, போர்ச்சேவகருடன் வந்து, அவனை ஜனங்களின் கைகளிலிருந்து விடுவித்து கோட்டைக்குள் கொண்டு சென்றார். சேனாதிபதியின் அனுமதியைப் பெற்று பவுல் அப்போஸ்தலன் படிகளின் உச்சியிலேயே நின்றபடி தான் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதைப் பற்றிய சாட்சியை அறிவித்தார். அப்போஸ்தலர் 22:3–21 வசனங்களில் லூக்கா அவருடைய சாட்சியை அப்படியே கொடுத்துள்ளார். பவுல் அப்போஸ்தலனைப் பற்றிய அநேக செய்திகளை இந்த வசனங்கள் வெளிப்படுத்துகின்றன. பவுல் அப்போஸ்தலன் தான் எருசலேம் தேவாலயத்தில் கண்ட தரிசனத்தில் தேவன் தன்னைப் புறஜாதிகளிடத்தில் அனுப்புவதாகக் கூறியதாக சாட்சிபகர்ந்தபோது, கூட்டத்தினர் கோபமடைந்து அவனைக் கொல்ல வேண்டும் என்று கத்தினார்கள். சேனாபதி அவனைக் கைது செய்தான்.

இதன்பிறகு பவுல் அப்போஸ்தலன் சந்தித்த விசாரணைகளையும், அவர் கூறிய சாட்சிகளையும் லூக்கா

தெளிவாக விவரித்துள்ளார். இரண்டு வருடங்களுக்கு மேலாக பவுல் சந்தித்த சோதனைகளிலெல்லாம் லூக்கா அவரைவிட்டு விலகவேயில்லை! இராயனிடம் விசாரிக்கப்படுவதற்காக பவுல் ரோமாபுரிக்குக் கொண்டு செல்லப்பட்டபோது, லூக்காவும் அவருடன் கப்பல் ஏறுகிறார் (அப். 27:2). ஒரு தேவ ஊழியனின் இறுதிக் காலத்தில் அவருக்குப் பக்கபலமாக இருந்த இந்தச் செயலே லூக்கா எழுதிய எழுத்துக்களைவிட மிகவும் மேன்மையானதாகக் காணப்படுகிறது! பவுல் அப்போஸ்தலனைப்போல அவர் ரோமக் குடியுரிமை பெற்றவருமல்ல; ரோமாபுரியை அறிந்தவருமல்ல! காணாத இடத்திற்கு, எந்தவிதப் பாதுகாப்புமில்லாமல் செல்லத் துணிந்ததற்கு அவர் பவுல் அப்போஸ்தலன் மீது கொண்டிருந்த அளவுகடந்த அன்பும், ஆண்டவர்மீது வைத்திருந்த திட விசுவாசமுமே காரணம்!

பவுல் அப்போஸ்தலன் இரண்டாவது முறை காவலில் வைக்கப்பட்டபோது, லூக்கா மட்டுமே அவருடன் இருந்தார் (2 தீமோ. 4:11). பவுல் அப்போஸ்தலன் இரத்தச்சாட்சியாக மரிக்கும்போது, லூக்கா அவருக்கு ஆறுதலளிக்கும்படி அருகே இருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை!

லூக்கா சுவிசேஷத்தின் சிறப்புக்கள்

ஏற்கெனவே குறிப்பிட்டபடி, இதுவரை எழுதப்பட்டுள்ள நூல்களிலேயே லூக்கா சுவிசேஷமே மிகவும் அருமையானது என்று போற்றப்படுகிறது!

அந்தியோகியாவைச் சேர்ந்த செல்வந்தனாகிய தேயோப்பிலு என்ற கிறிஸ்தவனுக்கு எழுதப்பட்ட கடிதம் போல இந்தச் சுவிசேஷம் எழுதப்பட்டுள்ளது. முதல் நான்கு வசனங்களில் அவர் இதை எப்படி எழுதினார் என்று குறிப்பிட்டுள்ளார்: கிறிஸ்துவைக் கண்ணாரக் கண்ட அப்போஸ்தலர்கள் போன்றவர்களிடமிருந்து செய்திகளைச் சேகரித்தார்; அதை அப்படியே கூறவிடவில்லை லூக்கா!

ஒவ்வொரு செய்தியைப் பற்றியும் திட்டமாய் விசாரித்தறிந்து உண்மை என்று கண்டறிந்த பிறகே அந்தச் செய்தியைக் குறிப்பிட்டுள்ளார்; கடைசியாக அனைத்துச் செய்தியையும் ஒழுங்காக வரிசைப்படுத்திக் கொடுத்துள்ளார்!

பவுல் அப்போஸ்தலன் செசரியாவில் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது லூக்கா வெறுமனே எருசலேமில் இருந்து விடவில்லை! இரண்டு ஆண்டுகளும் கலிலேயா, யூதேயா நாடுகளெங்கும் சுற்றித் திரிந்து, தான் கேள்விப்பட்ட செய்திகளை உறுதிப்படுத்திக் கொண்டார்; நிகழ்ச்சிகள் நடைபெற்ற இடங்களை நேரிலேயே கண்டார். அப்படிச் சென்ற வேளையில், தானும் இயேசுவானவரோடு அங்கெல்லாம் நடந்து திரிவதைப்போல அவர் நிச்சயம் உணர்ந்திருப்பார்; இந்த உணர்வுகள் அவருடைய சுவிசேஷத்தில் அப்படியே பிரதி பலிக்கின்றன! நேரில் தாமே கண்டதைப்போல ஒவ்வொரு நிகழ்ச்சியையும் அழகாக விவரித்துள்ளார் லூக்கா!

லூக்கா இந்த வேளையிலேயே தமது சுவிசேஷத்தை எழுதியிருக்கலாம் அல்லது பவுல் அப்போஸ்தலனின் மரணத்திற்குப் பிறகு எழுதியிருக்கலாம் என்று இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

உலகத்தின் முதல் கிறிஸ்தவ வரலாற்றாசிரியர் என்ற பெயரைப் பெற்ற லூக்கா, கிறிஸ்துவின் வரலாற்றைக் கூறும் போதும், துவக்க கால சபை வரலாற்றை எழுதும்போதும், அந்தந்த காலங்களில் இருந்த ரோமப் பேரரசர்கள் மற்றும் பிரதிநிதிகளின் பெயர்களைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்; முக்கிய ரோம வரலாற்று நிகழ்ச்சிகளையும் கொடுத்துள்ளார்! இதனால் திருச்சபை வரலாற்றின் முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்ற ஆண்டுகளை எளிதாகக் கண்டுபிடிக்க முடிகிறது! கிறிஸ்தவ வரலாற்று உண்மைகளும் உறுதிப்படுத்தப் படுகின்றன.

நோய்களைப் பற்றியும், எப்படிக் குணமாக்கப் பட்டுள்ளது என்பதுபற்றியும், குணமடைந்ததற்கான

அடையாளங்களையும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளமை இவர் சிறந்த மருத்துவர் என்பதையும் வெளிப்படுத்துகிறது.

கிறிஸ்துவின் பிறப்பு, இளமைப் பருவம், வளர்ச்சி, அவரது குடும்ப மற்றும் சமுதாய வாழ்க்கை பற்றியும் லூக்கா விரிவாகக் கொடுத்துள்ளார். மற்ற சுவிசேஷங்களைவிட இந்நூலில் அதிக செய்திகள் விவரிக்கப்பட்டுள்ளன. இயேசுவானவர் கூறிய 23 உவமைக் கதைகளில் 16 கதைகளை லூக்கா எடுத்தெழுதியுள்ளார்!

இழந்துபோனவர்களைத் தேடி, அவர்களை இரட்சிக்க இவ்வுலகுக்கு வந்த மீட்பராக கிறிஸ்துவை அனைவருக்கும் அறிமுகம் செய்கிறார். விசுவாசத்திற்கான வரலாற்று அடிப்படையை வலியுறுத்துவதே அவரது நோக்கமாக இருந்தது. முன்தூதுவனாகிய யோவான்ஸ்நானனின் பிறப்பு முதல் கிறிஸ்துவின் பரமேறுதல் வரை முழுமையான வரலாற்றுச் செய்திகளையும் கூறும் ஒரே நற்செய்தி நூல் லூக்கா எழுதிய சுவிசேஷமே!

அப்போஸ்தலருடைய நடபடிகள்

கிறிஸ்தவ சமயம் உலகமெங்கும் பரவத் துவங்கிய வரலாற்றைக் கூறும் இந்த நூலையும் தெயோப்பிலுவுக்கு எழுதப்பட்ட கடிதத்தைப்போன்றே லூக்கா அமைத்துள்ளார். யூதேயாவுக்கு வெளியே சிரியா, ஆசியா மைனர், எத்தியோப்பியா, சீப்புரு தீவு, மக்கெதோனியா, ரோமாபுரி போன்ற பகுதிகளில் சபை முதலில் எவ்வாறு பரவியது என்பதைத் தெளிவாகக் கொடுத்துள்ளார். சுருக்கமான ஆனால் செய்திகள் நிறைந்த அறிக்கைகள்!

முக்கியமான நிகழ்ச்சிகள் அதைப் படிப்பவர்களும், அதை நேரிலேயே கண்டதுபோல உணரும்படி அழகாக வர்ணிக்கப்பட்டுள்ளன! எபேசு பட்டணத்துக் கலகம் (அப். 19 அதி), எருசலேமில் ஏற்பட்ட கலவரம் (அப். 21:27–40), கப்பல் பயணம் (அப். 27 அதி.), கப்பல் விபத்துக்குள்ளாகுதல் (அப்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

1. [illegible] 1:1 முதல் 6:7 முடிய — [illegible] (6:7).

2. [illegible] 6:8 முதல் 9:31 முடிய — [illegible] (9:31).

3. [illegible] 9:32 முதல் 12:24 முடிய — [illegible] (12:24).

4. [illegible] 12:25 முதல் 16:5 முடிய — [illegible] (16:5).

5. [illegible] 16:6 முதல் 19:20 முடிய — [illegible] (19:20).

6. அப். 19:21 முதல் 28:31 முடிய — **பவுலின் இறுதி கால ஊழியம். விளைவு:** "மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல், தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருந்தான்" **(28:31).**

பவுல், பேதுரு அப்போஸ்தலர்களின் மரணத்தைப் பற்றி இந்த நூலில் லூக்கா குறிப்பிடவில்லை. எனவே இவர்களின் இரத்தச்சாட்சி மரணத்திற்கு முன்பு (கி.பி. 67) லூக்கா அப்போஸ்தலர்களின் நடபடி நூலை எழுதியிருக்கலாம்!

லூக்காவின் பிற்கால ஊழியம்

தனக்குப் பிரியமான அப்போஸ்தலர்களின் மறைவுக்குப் பின்னர் லூக்கா அவர்களுடைய பணியைத் தொடர்ந்தார். மக்கெதோனியா, கிரேக்கப் பகுதிகளிலேயே இவர் ஊழியம் செய்து வந்தார். இவரது பகுதியிலேயே அப்போஸ்தலனாகிய அந்திரேயாவும் பணிபுரிந்து பின்னர் இரத்தச்சாட்சியாக மரித்தார்.

லூக்கா தனது 84–வது வயதில் போவாதியாவில் மரணமடைந்தார். இங்குள்ள தீப்ஸ் பட்டணத்தில் வெண்பளிங்குக் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார்.

கி.பி. 356, 357–ஆம் ஆண்டுகளில் இரண்டாம் கான்ஸ்டான்டியஸ் பேரரசர் இவரது உடலை எடுத்து வந்து, கான்ஸ்டான்டிநோபிலில் இருந்த, அப்போஸ்தலர்களின் ஆலயத்தில் வைத்தார்.

தற்போது இவரது கபால எலும்பு ரோம் நகரில் புனித பேதுரு பேராலயத்திலுள்ள பீடமொன்றில் வைக்கப்பட்டுள்ளது.

தீப்ஸ் நகரில் (கிரீஸ்) இவரது கல்லறை இருக்கும் இடத்தில் ஒரு கல்லறை ஆலயம் கட்டப்பட்டுள்ளது!

கிறிஸ்துவுக்காக நற்செய்தி பகருபவர்கள் மட்டுமின்றி எழுத்து வடிவில் அவற்றை எழுதி வைப்பவர்களும்கூட முக்கியமானவர்கள் என்பதற்கு லூக்கா சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறார் என்று நம்மால் கூற முடியும்!

[illegible]

மார்ஸ்

மார்ஸ் [illegible] மார்ஸ் [illegible] மார்ஸ்.

மார்ஸின் நிலை

[illegible]

[illegible]

[illegible]



மாற்குவின் வீடு இருந்த இடம்

அவரும் அதிசயிக்கத்தக்க முறையில் விடுதலை பெற்றவுடன் இங்குதான் விரைந்து வந்தார் (அப். 12:1–7).

சமீபத்தில் எருசலேமிலுள்ள புனித மாற்கு ஆலயத்தில் இந்த இல்லத்தின் அஸ்திவாரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அங்கு கிடைத்த கல்வெட்டு ஒன்றில் இது மாற்கு, மரியாளின் இல்லமென்றும், "மேல் அறை" இருந்த வீடென்றும் பொறிக்கப் பட்டுள்ளது. எனவே மாற்கு இயேசுவின் சீடராக இல்லாதிருந்த போதிலும், அவரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார் என்பதில் ஐயமில்லை. மாற்கு 14:51,52 வசனங்களில் கூறப் பட்டுள்ள வாலிபன் மாற்குதான் என்றும் கருதப்படுகிறது.

என்றாலும் கிறிஸ்துவின் காலத்தில் மாற்கு அவரை ஏற்றுக்கொள்ளவில்லை என்றே தெரிகிறது. பிற்காலத்தில் பேதுரு அப்போஸ்தலனின் ஊழியத்தின்மூலமே மாற்குவும், அவர் தாயாராகிய மரியாளும் விசுவாசிகளானார்கள் என்று கூறப்படுகிறது. பேதுரு அப்போஸ்தலன் மாற்குவை தனது ஆவிக்குரிய குமாரன் என்று அழைக்கிறார் (1 பேதுரு 5:13).

வேதாகமத்தில் மாற்கு

பர்னபாவும், சவுலும் எருசலேமுக்கு வந்து தர்ம ஊழியத்தை நிறைவேற்றின பின்பு திரும்பிச் செல்லும்போது, மாற்குவையும் கூட்டிக்கொண்டு அந்தியோகியாவுக்கு வந்தார்கள் (அப். 12:25).

பரிசுத்த ஆவியானவரால் பர்னபாவும், சவுலும் முதல் அருட்பணியாளராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். அவர்கள் அந்தியோகியாவிலிருந்து தங்கள் முதல் மிஷனெரிப் பயணத்தைத் துவங்கியபோது மாற்குவும் அவர்களுக்கு உதவியாளனாக உடன் சென்றார் (அப். 13:5).

அவர்கள் முதலில் பர்னபாவின் சொந்த இடமாகிய சீப்புரு தீவுக்குச் சென்றார்கள். அங்கு சபையை நிறுவிய

பின்னர் கப்பலேறி, ஆசியா மைனர் (தற்போது துருக்கி) பகுதியிலுள்ள பெர்கே பட்டணத்துக்கு வந்தார்கள். அப்பொழுது துருக்கியின் உள்நாட்டுப் பகுதியில் நற்செய்தியை அறியாத, முரட்டு சுபாவமுள்ள புற ஜாதியினர் வசித்து வந்தார்கள். பவுலும், பர்னபாவும் அவர்களுக்கு நற்செய்தி அறிவிக்கப் புறப்பட்டது மாற்குவுக்குப் பிடிக்கவில்லை. பயமோ, அல்லது அவர்களுக்கு நற்செய்தியை அறிவிப்பது பயனற்றது என்ற அவிசுவாசமோ, என்ன காரணமோ தெரியவில்லை, பின் வாங்கிப்போன மாற்கு எருசலேமுக்குத் திரும்பி விட்டார்.

இரண்டு ஆண்டுகள் கழிந்தன. தனது செயலுக்காக மனம்வருந்திய மாற்கு மீண்டும் அந்தியோகியாவில் பவுல், பர்னபா இவர்களுடன் சேர்ந்து கொண்டார்.

பவுல் அப்போஸ்தலன் தனது இரண்டாவது மிஷனெரிப் பயணத்தைத் துவங்கும் வேளை வந்தது. பர்னபா மாற்குவையும் தங்களுடன் அழைத்துச் செல்ல விரும்பினார். ஆனால் பவுலோ அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. மாற்குமீது அவர் கொண்டிருந்த கோபமும், அவநம்பிக்கையும் இன்னும் தணியவில்லை. இதன் காரணமாக பவுல், பர்னபா இருவரும் கடும் கோபம் கொண்டு ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்தார்கள் (அப். **15:39**). பவுல் சீலாவைத் தெரிந்து கொண்டார்.

பர்னபா மனம் திருந்திய மாற்குவை ஏற்றுக் கொண்டார். பர்னபாவின் இந்தச் செயல் மாற்குவை ஒரு வல்லமையுள்ள ஊழியனாக வளர்ச்சியடையும்படி பெரிதும் உதவியது! இதன்பிறகு மாற்கு என்றுமே பின்வாங்கிப் போகவில்லை!

பர்னபா, மாற்குவைக் கூட்டிக்கொண்டு சீப்புரு தீவுக்கு வந்தார். இருவருமாக அங்கு ஏற்கெனவே நிறுவப்பட்டிருந்த சபைகளைப் பலப்படுத்தினார்கள்.

மாற்குவின் பிற்கால ஊழியம்

பதினொரு ஆண்டுகளுக்குப் பிறகு பவுல் அப்போஸ்தலன் ரோம் நகரில் சிறைப்பட்டிருந்தபோது அவருக்கும் மாற்குவுக்கும் இடையேயான மனக்கசப்பு நீங்கியது. ரோமாபுரியில் பவுல் அப்போஸ்தலனுக்குப் பக்கபலமாகவும், ஆதரவாகவும் விளங்கிய விசுவாசிகளில் முக்கியமானவர் மாற்குவே. முதலில் அவரைக் குறைகூறிய அப்போஸ்தலனே பின்னர் அவரை "ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன்" (2 தீமோ. 4:11) என்று பாராட்டும்படியாக மாற்கு நடந்து கொண்டார்!

பவுல் அப்போஸ்தலனுக்குமட்டுமின்றி பேதுரு அப்போஸ்தலனுக்கும் பேருதவி புரிந்துள்ளார் மாற்கு. பேதுரு எழுதப் படிக்கத் தெரியாத மீனவராக இருந்தபடியால் மாற்குவே அவருக்கு எழுத்தராகப் பணிபுரிந்துள்ளார். பேதுரு அப்போஸ்தலனுக்காக நிருபங்களை எழுதுவதில் உதவி செய்துள்ளார் (1 பேதுரு 5:13). பேதுருவிடமிருந்து திரட்டிய செய்திகளைக் கொண்டே மாற்கு தமது சுவிசேஷத்தை எழுதியுள்ளார்!

அலெக்சாந்திரியாவில் மாற்கு

அப்போஸ்தலர்களாகிய பேதுரு, பவுல், பர்னபா இவர்களுக்கு உதவியதோடு போதுமென்று இருந்துவிடவில்லை மாற்கு!

மத்திய தரைக்கடலைக் கடந்து சென்ற மாற்கு தனது தகப்பனார் பணிபுரிந்துவந்த, வட ஆப்பிரிக்காவிலிருந்த சைரேனைகா பட்டணத்துக்குச் சென்றார். இங்கு கிரேக்கர்களும், அநேக யூதர்களும் வசித்து வந்தார்கள். இங்கு மாற்கு அநேக அற்புதங்களைச் செய்தார். நற்செய்தியை ஆர்வத்தோடு பரப்பினார், அநேகர் விசுவாசிகளானார்கள்.

அங்கிருந்து எகிப்தின் பெரிய பட்டணமாகிய அலெக்சாந்திரியாவுக்குச் சென்றார். புற ஜாதியாரின் கோட்டையாக விளங்கிய இங்கு நற்செய்தியை அறிவிப்பது கடினமென்றாலும், மாற்கு மனம் தளரவில்லை! கி.பி. 55 அல்லது கி.பி. 61–ல் இவர் அலெக்சாந்திரியா சென்றிருப்பார் என்று நம்பப்படுகிறது.

மாற்கு கிழக்கு வாயிலின் வழியாக நகரத்தினுள் நுழைந்தார். அப்போது அவரது காலணியின் வார் அறுந்துபோய் விட்டது! உடனே ஒரு செருப்புத் தைப்பவனை அணுகினார். அவன் ஆணியடித்தபோது தவறுதலாக அவன் விரலில் பாய்ந்துவிட்டது ஆணி! "ஹெயிஸ் ஹோ தியோஸ்" என்று கத்தினான் அந்தச் செருப்புத் தொழிலாளி. "கடவுள் ஒருவரே" என்பது இதற்குப் பொருள். இதைக் கேட்டவுடன் மாற்கு மகிழ்ச்சியடைந்தார். பல தெய்வங்களை வணங்கி வந்த மக்களிடையே ஒரே கடவுளை நம்பும் ஒருவனா? அதிசயிக்கத் தக்க வகையில் அவனது காயத்தைக் குணமாக்கினார் மாற்கு; அவனுக்கு நற்செய்தியை அறிவித்தார்; அவனும் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டான்! இந்தச் செருப்பு தைக்கும் தொழிலாளி தான், மாற்குவுக்குப் பிறகு அலெக்சாந்திரியா சபையின் இரண்டாவது பேராயராகப் பணிபுரிந்த அனியானஸ்! அனியானஸ் மாற்குவைத் தமது வீட்டுக்கு அழைத்துச் சென்றார். அவரும், அவரது குடும்பத்தினரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். இன்னும் அநேகரும் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள்!

விக்கிரகங்களை அழிக்க ஒரு கலிலேயன் வந்திருக்கிறான் என்ற செய்தி காட்டுத் தீ போல எங்கும் பரவியது! மாற்குவைக் கொலை செய்யும்படி அநேகர் தேடி அலைந்தார்கள்! மாற்கு அனியானசை பேராயராக அபிஷேகம் செய்தார்; அவருக்குத் துணையாக மூன்று போதகர்களையும், ஏழு டீக்கன்மார்களையும் நியமனம் செய்தார். அவர்களிடம்

விடை பெற்ற மாற்கு மீண்டும் ரோமாபுரிக்குப் பயணம் புறப்பட்டார்.

மீண்டும் அப்போஸ்தலர்களுடன்

பவுல், பேதுரு இரு அப்போஸ்தலர்களையும் சந்தித்த மாற்கு பின்னர் ஆசியா மைனர் பகுதியிலிருந்த சபைகளைக் காணச் சென்றார்.

பவுல் அப்போஸ்தலன் ரோமாபுரியில் இரண்டாவது தடவையாகச் சிறைப்பட்டிருக்கும்போது அவர் மாற்குவைக் காண விரும்பினார். தீமோத்தேயுவிடம் மாற்குவை ரோமாபுரிக்கு அழைத்து வரும்படி வேண்டிக் கொண்டார் (2 தீமோ. 4:11). மாற்கு பவுல் அப்போஸ்தலனின் பாராட்டையும் பெற்றார். ஆனால் மாற்கு மீண்டும் அவரைச் சந்தித்தாரா என்பதைப் பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை.

பவுல், பேதுரு இவர்களுடைய இரத்தச்சாட்சி மரணத்திற்குப் பிறகு ரோம சபைகளைப் பலப்படுத்திவிட்டுத் திரும்பிய பர்னபாவுடன் மாற்குவும் சீப்புரு தீவுக்குச் சென்றார். அங்கு எதிர்பாராதவிதமாக பர்னபா படுகொலை செய்யப்பட்டார். மாற்கு எவருக்கும் தெரியாமல் அவரது உடலத்தை எடுத்துவந்து சாலமி பட்டணத்துக்கு வெளியே கற்களினாலான ஒரு கல்லறையில் அவரை அடக்கம் செய்தார்.

இரத்தசாட்சியாக மரித்த மாற்கு

மீண்டும் அலெக்சாந்திரியாவுக்குத் திரும்பிய மாற்கு, தன்னுடன் தனது சுவிசேஷத்தின் எகிப்திய மொழி பெயர்ப்பையும் எடுத்துச் சென்றார் என்று கூறப்படுகிறது.

அலெக்சாந்திரியாவில் சபை வளர்ந்திருப்பதைக் கண்டு தேவனைத் துதித்தார் மாற்கு! அவர்களை மேலும் விசுவாசத்தில் பலப்படுத்தினார். சைரேனைகாவுக்குச் சென்ற மாற்கு அங்கு இரண்டாண்டுகள் தங்கியிருந்தார். வளர்ந்த

விட்ட சபைக்குப் பேராயரை அபிஷேகம் செய்தார். போதகர்களையும் நியமனம் செய்தார். சபை மேலும் வளர்ச்சி யடைந்தபின் அலெக்சாந்திரியாவுக்குத் திரும்பினார்.

அலெக்சாந்திரியா சபையின் வளர்ச்சியின் காரண மாக, அருகேயிருந்த பாகாலிஸ் என்ற இடத்தில் புதிய ஆலயம் கட்டப்பட்டிருப்பதைக் கண்டு தேவனைத் துதித்தார்.

விக்கிரக ஆராதனைக்காரர்கள் கிறிஸ்தவர்கள்மீது கொண்டிருந்த விரோதம் கொழுந்துவிட்டு எரிந்தது. கி.பி. 68–ஆம் ஆண்டு ஈஸ்டர் பண்டிகையும், புறஜாதியாரின் ஸெராபிஸ் பண்டிகையும் ஒரே நாளில் கொண்டாடப்படும் நிலை ஏற்பட்டது. பாகாலிஸ் ஆலயத்தில் ஈஸ்டர் ஆராதனை நடந்து கொண்டிருந்தபோது, ஒன்றுகூடிய புறஜாதியார் ஆயுதங்களுடன் ஆலயத்தைச் சூழ்ந்து கொண்டார்கள். மாற்கு அவர்களால் பிடிக்கப்பட்டார். கழுத்தில் கயிற்றைக் கட்டி தெருக்களின் வழியே இழுத்துச் சென்றார்கள். அன்று இரவு அவர்களது பண்டிகையின்போது மாற்குவை உயிரோடு தீப்பந்தமாகக் கொளுத்தினார்கள். மறுநாள் காலையிலும் இதே கொடூரத்தைத் தொடர்ந்தார்கள். படுவேதனையுற்ற மாற்கு தன் ஜீவனை விட்டார்!

அவரது உடலை நெருப்பில் பொசுக்கி அழித்துவிட வேண்டுமென்று புறஜாதியார் முயன்றார்கள். ஆனால் திடீரென்று பெருங்காற்று வீசியது! கனமழை பெய்தது! கூடியிருந்தவர்கள் பயந்து ஓடிவிட்டார்கள்.

விசுவாசிகள் இரகசியமாக வந்து, அவரது உடலை எடுத்துச் சென்று, ஆலயத்தின் பலிபீடத்தின் அருகே கல்லில் குடையப்பட்ட கல்லறையொன்றில் அடக்கம் செய்தார்கள்.

மாற்குவின் நினைவுச் சின்னங்கள்

கி.பி. 642–ல் அராபியர்கள் அலெக்சாந்திரியாவின் மீது படையெடுத்தபோது ஆலயம் சூறையாடப்பட்டது. மாற்குவின் கபால எலும்பு திருடப்பட்டது!

மெல்லைட் பிரிவினர் மாற்குவின் உடலைப் பத்திரப் படுத்தினார்கள். கபால எலும்பு அராபிய ஆளுநரின் கைக்கு வந்தது. அதை அவர் காப்டிக் திருச்சபைப் பேராயர் பெஞ்சமினிடம் அளித்து விட்டார்.

கி.பி. 828-ல் வெனிஸ் நகரைச் சேர்ந்த வணிகர்கள் மாற்குவின் உடலைத் திருடி, அராபியர்களின் கண்ணில் படாதபடி உடலை ஒரு பெரிய ஊறுகாய் ஜாடியினுள் ஒளித்து வைத்து, இத்தாலியிலுள்ள வெனிஸ் நகரத்திற்கு எடுத்து வந்தார்கள். அங்கு புனித மாற்கு ஆலயத்தைக் கட்டி அதில் வைத்தார்கள்.

சமீபத்தில் போப் ஆறாம் பால், மாற்குவின் உடலை அலெக்சாந்திரியாவிலுள்ள காப்டிக் ஆலயத்திற்கு அளித்து விட்டார்.

ரோம் நகரில் புனித புடென்டியானா ஆலயத்தின் அஸ்திபாரத்தில் முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு வீட்டின் இடிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இங்கிருந்தபடியேதான் மாற்கு தனது சுவிசேஷத்தை எழுதினார் என்று கூறப்படுகிறது!

மாற்குவின் சுவிசேஷம்

மாற்கு சுவிசேஷம் முன்னர் கி.பி. 68-ல் எழுதப்பட்டது என்று நம்பப்பட்டு வந்தது. ஆனால் சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்ட சாக்கடற் சுருள்களில் கி.பி. 50-ல் எழுதப்பட்ட மாற்கு சுவிசேஷத்தின் சிறு துண்டு ஒன்றும் கிடைத்துள்ளது. எனவே கி.பி. 50-க்கு முன்னரே மாற்கு இந்தச் சுவிசேஷத்தை எழுதியுள்ளார் என்பது உறுதியாகிறது.

நான்கு சுவிசேஷங்களில் முதலாவது எழுதப்பட்ட சுவிசேஷம் இது. ரோம் நகரத்தில் எழுதப்பட்ட இந்நூல் ரோமர்களின் குணநலன்களுக்கு ஏற்ப எழுதப்பட்டுள்ளது. ரோமர்கள் வார்த்தைகளைவிட செயலுக்கு அதிக

முக்கியத்துவம் கொடுப்பவர்கள். இந்தச் சுவிசேஷத்தில் இயேசு செய்த அற்புதங்களில் பெரும்பாலானவை விளக்கப் பட்டுள்ளன; ஆனால் அவர் கூறிய உவமைக் கதைகள் ஒரு சிலவே கொடுக்கப்பட்டுள்ளன.

நிகழ்ச்சிகளை விவரிப்பதில் மற்ற சுவிசேஷங்களை விட இந்தச் சுவிசேஷம் முதலிடம் வகிக்கிறது. பேதுரு கல்வி யறிவற்றவராக இருந்தபோதிலும், அனைத்தையும் நன்கு ஆழமாகக் கவனிக்கக்கூடியவர் என்பதையும், அப்படியே மாற்குவுக்கு விவரமாக விளக்கிக் கூறியுள்ளார் என்பதையும் இந்தச் சுவிசேஷம் புலப்படுத்துகிறது.

புறஜாதியாருக்கு எழுதப்பட்டதால் அநேக லத்தீன் பதங்கள் இடம்பெற்றுள்ளன. யூத பழக்க வழக்கங்கள் அந்நியர் புரிந்து கொள்ளும்படி தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

இயேசுவானவரின் செயல் ஊழியத்திற்கே அதிக முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. அவரது பிறப்பு, பாலிய வயது பற்றிய செய்திகள் கொடுக்கப்படவில்லை. யோவான்ஸ்நானின் ஊழியம், கிறிஸ்துவின் ஞானஸ்நானம், சோதிக்கப்படுதல் இவை பற்றிச் சுருக்கமாகக் கூறிவிட்டு, நேரடியாக இயேசுவின் செயல் ஊழியத்தை விவரிக்கச் சென்றுவிடுகிறார் மாற்கு.

தேவ குமாரனும், மீட்பருமாகிய கிறிஸ்து ஒரு செயல் வீரரும்கூட என்பதைப் புறஜாதியாருக்கு அறிமுகம் செய்வதில் வெற்றி பெறுகிறார் மாற்கு!

பின்வாங்கிப் போனாலுங்கூட மனந்தளராமல் விசுவாசத்தோடு திரும்ப முன்னேறிச் செல்லும்போது தேவனுக்காக வல்லமையான பணிகளைச் செய்ய முடியும் என்பதற்கு மாற்கு நிரூபணமாகிறார்!

6

பிலிப்பு

இவர் இயேசுவின் சீடர்களுள் ஒருவரான பிலிப்பு அல்ல! இவர் ஸ்தேவானைப் போல பந்தி விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட (அப். 6:5) ஏழு பேரில் ஒருவரானவர்! இவர்கள் எருசலேம் சபையில் செல்வாக்குப் பெற்றிருந்தவர்கள். பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப் பட்டவர்கள்; ஞானம் நிறைந்தவர்கள்; நற்சாட்சி பெற்றுள்ளவர்கள் (அப். 6:3).

பிலிப்பு என்ற கிரேக்கப் பதத்திற்கு "குதிரைகளை நேசிப்பவன்" என்பது பொருளாகும். பிலிப்பு கிரேக்க மொழி பேசும் ஒரு யூதர். இவர் கிரேக்க நாட்டிலோ அல்லது எகிப்திலோ பிறந்திருக்கலாம்.

கிரேக்க மொழி பேசும் விதவைகளின் அன்றாட உணவுத் தேவைகளைக் கவனிப்பதற்காக நியமிக்கப்பட்ட இந்த ஏழு பேரும் கிறிஸ்துவுக்காகச் சாட்சி பகருபவர்களாகவும் இருந்தார்கள். இவர்கள் தங்களது பணிகளைச் செவ்வனே செய்து வந்தபடியால், "தேவ வசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந் தார்கள்" (அப். 6:7).

சமாரியாவில் பிலிப்பு!

உடன் ஊழியர் ஸ்தேவானின் மரணத்திற்குப் பின்னர் எருசலேமிலிருந்த சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று.

அப்போஸ்தலர்களைத் தவிர மற்ற அனைவரும் யூதேயா, சமாரியா தேசங்களில் சிதறுண்டு போனார்கள்.

இந்த இக்கட்டான வேளையில் பிலிப்பு செய்த நற்செய்தி ஊழியமே வேதாகமத்தில் முதலாவதாகக் கூறப்பட்டுள்ளது. யூதரல்லாதவர்களையும் சபையில் சேர்த்துக் கொண்ட முதன்மையானவர்களில் பிலிப்புவும் ஒருவராக இருக்கிறார். சமாரியர்கள் யூதர்களால் மிகவும் தாழ்வானவர் களாக எண்ணப்பட்டு வந்தார்கள். இதுவரை அவர்களிடையே ஊழியம் செய்ய ஒருவருமே சென்றதில்லை! பிலிப்புவே முதலடி எடுத்து வைத்து வெற்றி பெற்றிருக்கிறார்.

பிலிப்பு சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்தில் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தார் (அப். 8:5); அசுத்த ஆவிகளை விரட்டினார்; அநேக நோயாளிகளைக் குணமாக்கினார் (8:7). இதனால் "அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று" (8:8).

சீமோன் என்ற மாயவித்தைக்காரன் சமாரியா நாட்டு மக்களைத் தனது மாய வித்தைகளினால் பிரமிக்கப் பண்ணிக் கொண்டிருந்தான். அநேகர் பிலிப்புவின் பிரசங்கத்தைக் கேட்டு, அவனுடைய மாயக் கட்டுகளிலிருந்து விடுபட்டு, கிறிஸ்துவை விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றார்கள் (8:12). சீமோனும்கூட விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டான். என்றாலும் அவனது நாட்டம் முழுவதும் பிலிப்பு செய்த அற்புதங்கள் மேலேயே இருந்தது! சமாரியாவில் ஏற்பட்ட எழுப்புதலைப் பற்றிக் கேள்விப்பட்ட அப்போஸ்தலர்கள் பேதுருவையும், யோவானையும் அங்கு அனுப்பினார்கள். அவர்கள் ஜெபித்து, விசுவாசிகளின்மீது கைகளை வைக்கும்போது, விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறுவதைக் கண்ட சீமோன் பணம் கொடுத்து, பரிசுத்த ஆவியானவரை அருளும் அதிகாரத்தை பெற விரும்பினான் (8:19). இன்னும் அவனுடைய மாய வித்தைக்காரப் புத்தி அழிந்துபோகவில்லை! ஆனால்

பேதுருவால் கடுமையாகக் கடிந்துகொள்ளப்பட்டபோது, தனது தவறை உணர்ந்து மீண்டும் மனந்திரும்புகிறான்.

இவ்வாறு பிலிப்புவின் ஊழியத்திற்கு எதிராக இருந்திருக்கக்கூடிய ஒருவனையும் தேவன் அதிசயிக்கத்தக்க வகையில் மாற்றிவிடுகிறார்! பிலிப்புவின் சமாரிய ஊழியம் முழு வெற்றியடைந்தது எனலாம்!

எத்தியோப்பிய மந்திரி

பிலிப்புவின் அடுத்த ஊழியத்தைப் பற்றிய கட்டளை அவருக்கு அளிக்கப்படுகிறது. "பின்பு கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி: நீ எழுந்து, தெற்கு முகமாய் எருசலேமி லிருந்து காசா பட்டணத்துப் போகிற வனாந்தரமார்க்கமாய்ப் போ என்றான்" (அப். 8:26).

இதுவும் யூதரல்லாத ஒரு பகுதிதான்! பாலைவனப் பாதை வேறு! என்றாலும் எதிர்க்கேள்வி கேட்காமல், பிலிப்பு விசுவாசத்துடனே எழுந்து சென்றார். இந்த விசுவாசச் செயலால் ஒரு முழு நாடே கிறிஸ்தவ நாடாகிறது! அது மட்டுமன்றி இரண்டாயிரம் ஆண்டுகளாக கிறிஸ்தவ நாடாகவே இருந்து வந்திருக்கிறது!

தேவன் ஒருவரைத் தமக்காகத் தெரிந்துகொள்ளும் போது அதற்கான முன் ஆயத்தங்கள் அனைத்தையும் செய்து முடித்திருக்கிறார் என்பதற்கு இந்த நிகழ்ச்சி சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது! நாம் செய்ய வேண்டியதெல்லாம் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவது மட்டுமே!

1. இடம்: அது பாலைவனப் பாதைதான்; என்றாலும் பிலிப்பு அந்தப் பாதையை அடைந்தபோது, எத்தியோப்பிய மந்திரி ஒருவர் எருசலேமிலிருந்து இரதத்தில் தனது ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். அவர் எத்தியோப்பிய நாட்டில் செல்வாக்கு மிக்க ஒருவர்!

கந்தாகே என்பது எத்தியோப்பிய அரசியின் பெயரல்ல; இது அவருடைய பட்டமாகும். இதன் பொருள் "ராணி மாதா" என்பதாகும். அப்போது மெரோயி என்ற பட்டணத்தைத் தலைநகராகக் கொண்டு எத்தியோப்பியாவை ஆண்டுவந்த இந்த அரசியின் பெயர் அமெந்திதேரே (கி.பி. 25–41) என்பதாகும்.

பிலிப்பு சந்தித்தவர் வெறும் மந்திரி மட்டுமல்ல! அவர் அரசியின் பொக்கிஷ சாலைக்குத் தலைவனுமாக இருந்தார்! அவர் பொருளாளராக இருந்தபடியால், வணிக மந்திரியாக இருந்திருக்கலாம்! எது எப்படியிருந்தாலும், அவரது மன மாற்றத்திற்குப் பின்னர், எத்தியோப்பியா நாடெங்குமுள்ள அவரது செல்வாக்கின் காரணமாக நாடெங்கிலும் நற்செய்தி பரவ வாய்ப்பு ஏற்பட்டது என்பதில் ஐயமில்லை.

2. வேளை: அவர் பணிந்துகொள்ளும்படி எருசலேமுக்கு வந்து திரும்பிக் கொண்டிருந்தார். அவர் யூதராக இல்லாதிருப்பினும், எருசலேம் ஆலயத்திற்கு வழிபட வந்திருந்தார்; ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமமும் அவர் கையிலிருந்தது (8:28). எனவே ஒரே தேவனைப் பற்றி அவர் அறிந்திருந்தார் என்பது தெளிவாகிறது. ஆனால் மனுக்குல மீட்பிற்காக தேவன் அளித்திருந்த இரட்சிப்பின் திட்டத்தை அவர் அறிந்திருக்கவில்லை! பிலிப்பு இயேசுவைப் பற்றிக் கூறியவுடன், அவரே தீர்க்கதரிசனத்தின் வெளிப்பாடு என்பதை அறிந்து உடனடியாக விசுவாசித்தார்! அவர் தனது நாட்டிற்குத் திரும்பிக் கொண்டிருக்கும் வேளையில் அதைத் தெரிந்து கொண்டபடியால் இரண்டு பலன்கள் ஏற்பட்டன: (1) அவர் இரட்சிப்பின் சந்தோஷத்தை நேரடியாகத் தன் மக்களுடன் பகிர்ந்து கொள்ளும்படி முடிந்தது. (2) கிறிஸ்தவரான பின்னர் எருசலேமுக்கு வந்து, அவருக்குத் தெரிந்திருந்த யூதர்களால் குழப்பமடைந்து, பின்வாங்காதபடிக்குக் காத்துக் கொள்ளப் பட்டார்!

3. [illegible]

[illegible]

[illegible]

4. [illegible] (6:33).

5. [illegible] "[illegible]" [illegible].

[illegible]



பாலைவனப் பாதை

பிலிப்புவின் பிரசங்க ஊழியம்

இதன் பின்னர் பிலிப்புவின் ஊழியம் விரிவாக விளக்கப்படவில்லை. "பிலிப்பு ஆசோத்திலே காணப்பட்டு, அங்கிருந்து பட்டணங்களிலெல்லாம் செசரியாவுக்கு வருமளவும் எல்லா பட்டணங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக் கொண்டு வந்தான்" (அப். 8:40). பவுல் அப்போஸ்தலனின் மிஷனெரி பயணங்களுக்கு முன்பாகவே, புறஜாதியாரை கடற்கரைப் பகுதியில் ஊர் ஊராக நற்செய்தி அறிவித்த பெருமையைப் பெறுகிறார் பிலிப்பு!

பிலிப்பு செசரியாவிலேயே தங்கி தனது ஊழியத்தைத் தொடர்ந்தார் என்று தெரிகிறது. இருபது ஆண்டுகளுக்குப் பிறகு பவுல் அப்போஸ்தலன் செசரியாவுக்கு வந்தபோது பிலிப்புவின் வீட்டில் தங்கினார் (அப். 21:8).

பிலிப்புவின் நான்கு பெண்களும் திருமணமாகாதவர்கள். இவர்கள் தீர்க்கதரிசன வரம் பெற்றிருந்தார்கள் (அப். 21:9).

லூக்காவும் இவ்வேளையில் பிலிப்புவின் வீட்டில் தங்கியிருந்தார். அப்போது அவர் எத்தியோப்பிய மந்திரி பற்றிய நிகழ்ச்சியைப் பிலிப்புவிடமிருந்து வாய்மொழியாகவே கேட்டிருக்கலாம் என்று எண்ண இடமிருக்கிறது.

பவுல் அப்போஸ்தலனும், அவரைச் சேர்ந்தவர்களும் அநேக நாட்கள் பிலிப்புவின் வீட்டில் தங்கியிருந்தார்கள். பிற்காலத்தில் பிலிப்புவின் வீடு கிறிஸ்தவ யாத்திரிகர்கள் சுற்றிப் பார்க்கும் இடமாக இருந்ததென்று ஜெரோம் கூறுகிறார்.

பிலிப்பு பிற்காலத்தில் சிறியாசியாவிலிருந்த, ஹியெராபொலிஸ் என்ற பட்டணத்தில் பேராயராக இருந்து, வயது சென்று பின்னர் மரித்தார் என்று சிலர் குறிப்பிட்டுள்ளனர்.

நமது ஆண்டவரின் கட்டளைக்கேற்ப இனப்பாகுபாடின்றி, புறஜாதியார் மத்தியிலும் நற்செய்தி பரவக் காரணமாயிருந்தவர்களுள் முக்கியமான ஒருவர்தான் பிலிப்பு!

7

தீமோத்தேயு

பவுல் அப்போஸ்தலனுக்கு நீண்ட காலமாக உதவியாளராக இருந்தவர் தீமோத்தேயு. இவரது தகப்பனார் ஒரு கிரேக்கர்; தாயார் ஐனிக்கேயாள் ஒரு யூதப் பெண்மணி.

தீமோத்தேயுவின் தாயாரும், அவரது பாட்டி லோவிசாளும் அவருக்குச் சிறுவயதிலேயே வேத சத்தியங்களைக் கற்றுக் கொடுத்து (2 தீமோ. 1:5; 3:15) அவரை ஒரு பக்திமானாக வளர்த்து வந்தார்கள். "மாயமற்ற விசுவாசம்" (2 தீமோ. 1:4) கொண்டவர் என்று பவுல் அப்போஸ்தலனால் நற்சாட்சி பெற்றிருந்தார்!

தீமோத்தேயு லீஸ்திரா என்ற பட்டணத்தில் பிறந்தவர். பவுல் அப்போஸ்தலன் தனது முதல் பயணத்தின்போது, லீஸ்திராவுக்கு வந்த வேளையில் (அப். 14 அதி.) தீமோத்தேயுவும், அவரது தாயாரும் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். ஏனென்றால் பவுல் அப்போஸ்தலன் இரண்டாவது தடவை லீஸ்திராவுக்குச் சென்றபோது, தீமோத்தேயு நற்சாட்சிபெற்ற கிறிஸ்தவராக விளங்கினார் (அப். 16:1,2).

பவுல் அப்போஸ்தலனுடன் தீமோத்தேயு

தீமோத்தேயுவின் விசுவாசத்தையும், ஊழிய வாஞ்சையையும் கண்ட பவுல் அப்போஸ்தலன் அவரைத் தம்முடன் அழைத்துச் செல்ல விரும்பினார் (அப். 16:3).

தீமோத்தேயு இந்த ஊழியத்திற்கு அழைக்கப்பட்ட போது அவருக்கு 20 வயதுதான் இருக்கும். மிக இளவயதினராகிய (1 தீமோ. 4:12) அவரைக் கிறிஸ்துவுக்குள் வல்லமையான ஊழியராக்கிய பெருமை பவுல் அப்போஸ்தலனையே சேரும்! தீமோத்தேயுவைப் பற்றிய தீர்க்கதரிசனங்களினால் (1 தீமோ. 1:18; 4:14), அவரது பிற்கால மேன்மையைப் பற்றி நன்குணர்ந்த பவுல் அப்போஸ்தலன் அவரைத் தனது உடன் ஊழியனாகச் சேர்த்துக் கொள்ளத் தயங்கவில்லை!

நற்செய்திப் பணி செய்யும்படியாக, பவுல் அப்போஸ்தலனோடு சேர்ந்து, லீஸ்திரா சபை மூப்பர்களும் தீமோத்தேயுவைப் பிரதிஷ்டை செய்தார்கள் (1 தீமோ. 4:14; 2 தீமோ. 1:6).

தீமோத்தேயுவின் தகப்பனார் ஒரு கிரேக்கர் என்று எல்லோராலும் அறியப்பட்டிருந்தபடியால், இது ஒருவேளை இளவயதினராகிய தீமோத்தேயுவின் ஊழியத்திற்கு இடறு உண்டாக்கலாம் என்று கருதிய பவுல் அப்போஸ்தலன் அவர் விருத்தசேதனம் பண்ணிக் கொள்ளும்படி செய்தார் (அப். 16:3).

தீமோத்தேயு பவுல் அப்போஸ்தலனின் குழுவினரோடு சேர்ந்துகொண்ட பிறகு அவர்கள் பிரிகியா, கலாத்தியா நாடுகளில் நற்செய்தியை அறிவித்துவிட்டு, துரோவாவுக்கு வந்து சேர்ந்தார்கள். இங்கே லூக்காவும் அவர்களுடன் சேர்ந்து கொண்டார்.

கடல் பயணமாக மக்கெதொனியா தேசத்தைச் சேர்ந்த பிலிப்பி பட்டணத்துக்கு வந்தார்கள். இங்கே பவுல் அப்போஸ்தலனும், சீலாவும் ஜனங்களால் நன்றாக அடித்துச் சித்திரவதை செய்யப்பட்டு, (அப். 16:23) சிறையிலடைக்கப் படுகிறார்கள். தீமோத்தேயு தனது முதல் பயணத்திலேயே ஊழியர்களுக்கு ஏற்படும் துன்பங்களை நேரிலேயே காணும் வாய்ப்பைப் பெறுகிறார். அதே வேளையில் அவர்கள் ஆண்டவரால் அதிசயிக்கத்தக்க முறையில் விடுவிக்கப்

படுவதையும் கண்கூடாகக் காண்கிறார். இந்த அனுபவம் அவரது விசுவாசத்தைப் பலப்படுத்தி, பின்னர் அவர் தன்னந்தனியாக சிறையிலடைக்கப்படும்போது அவருக்கு ஆறுதலாக இருந்திருக்கக்கூடும் (எபி. 13:23).

தெசலோனிக்கே பட்டணத்தில் பவுல் அப்போஸ்தலனுக்கு விரோதமாக யூதர்கள் உண்டாக்கின கலகத்துக்குப் பிறகு, அவர்கள் பெரேயா வந்தபோது, அங்கேயும் அதே யூதர்கள் கலகம்பண்ண வந்துவிட்டார்கள்! உடனே பவுல் அப்போஸ்தலனைக் கடல் மார்க்கமாக அனுப்பிவிட்டு, சீலாவும், தீமோத்தேயுவும் அங்கே தங்கினார்கள் (அப். 17:14). கோட்டைச் சுவர்போன்ற பவுல் அப்போஸ்தலனின் துணையின்றி, இவர்கள் தனியாக கலகக்காரர்களைச் சமாளிக்க நேரிட்டிருக்கலாம். இந்த அனுபவம் தீமோத்தேயுவுக்கு எதிர்ப்புகளைச் சமாளிக்கும் மனோபலத்தையும், திட விசுவாசத்தையும் உருவாக்கிக் கொடுத்திருக்கலாம்!

பவுல் அப்போஸ்தலன் அத்தேனே பட்டணம் வழியாக கொரிந்து பட்டணத்தை அடைந்து, அங்கே ஊழியம் செய்து வந்தபோது, சீலாவும், தீமோத்தேயுவும் மீண்டும் அவருடன் சேர்ந்து கொண்டார்கள் (அப். 18:5).

தீமோத்தேயுவுக்கு முதல் பொறுப்பு

இதற்கிடையே தீமோத்தேயு தன்னந்தனியாக ஒரு மிகப்பெரிய பொறுப்பைச் செய்து முடித்திருக்கிறார்! கலகத்தின் நிமித்தமாக பவுல் அப்போஸ்தலனும், மற்றவர்களும் இரவோடு இரவாக தெசலோனிக்கே பட்டணத்தைவிட்டுக் கிளம்பி வர வேண்டியிருந்தது. அது மட்டுமன்றி தெசலோனிக்கே பட்டணத்தைச் சேர்ந்த யூதர்கள் பெரேயாவுக்கும் வந்து கலகத்தைத் தூண்டிவிட்டார்கள்! இதனால் தெசலோனிக்கேயிலிருந்த விசுவாசிகளின் நிலை எப்படியிருக்கிறது என்று அறிய பவுல் அப்போஸ்தலன் விருப்பம் கொண்டதில் வியப்பொன்று

யில்லையே! இந்தப் பணிக்காக அவர் தேர்ந்தெடுத்தது சீலாவை அல்ல! மிகவும் இளைஞனாகிய தீமோத்தேயுவைத்தான் அவர் தேர்ந்தெடுத்தார். கலகக்காரர்களிடையே அனுப்புமளவுக்கு அவருக்கு தீமோத்தேயுவின்மீது நம்பிக்கை இருந்தது! தீமோத்தேயுவும் அவரது நம்பிக்கை வீணாகாதபடி, ஆண்டவருடைய துணையோடு கொடுத்த பணியைச் செய்து முடித்துவிட்டார்!

அவருக்குக் கொடுக்கப்பட்ட பணி: கலகம் நடந்த தெசலோனிக்கே சென்று — "இந்த உபத்திரவங்களினாலே, ஒருவனும் அசைக்கப்படாதபடிக்கு உங்களைத் திடப்படுத்தவும், உங்கள் விசுவாசத்தைப்பற்றி உங்களுக்குப் புத்திசொல்லவும்" — தீமோத்தேயுவை அனுப்பினதாகப் பவுல் அப்போஸ்தலன் பின்னர் எழுதுகிறார் (1 தெச. 3:2). முதன்முதலாக ஊழியத்துக்குச் செல்லும் ஓர் இளைஞனுக்கு இது பெரிய பொறுப்புதான் என்பதில் ஐயமில்லை! ஆனால் தீமோத்தேயு இந்தப் பொறுப்பைச் செவ்வனே செய்து முடித்தாரா? ஆமாம், சிறப்பாகச் செய்து முடித்துவிட்டார். தெசலோனிக்கே சபையினரின் விசுவாசத்தையும், அன்பையும் குறித்த (1 தெச. 3:6) நற்செய்தியோடு கொரிந்து பட்டணத்துக்கு வந்து சேருகிறார்! அது மட்டுமின்றி, தீமோத்தேயு கொண்டு வந்த இந்தச் செய்தி பவுல் அப்போஸ்தலனுக்கு மேலும் உற்சாக மூட்டியது! வசனத்தைப் பாருங்கள்: "பவுல் ஆவியில் வைராக்கியங்கொண்டு, இயேசுவே கிறிஸ்து என்று யூதருக்குத் திருஷ்டாந்தப்படுத்தினான்" (அப். 18:5).

தீமோத்தேயு கொண்டுவந்த இந்த நற்செய்திக்குப் பதில் கடிதமாக, பவுல் அப்போஸ்தலன் கொரிந்து பட்டணத்தி லிருந்தே தெசலோனிக்கே சபையாருக்கான முதல் நிருபத்தை எழுதியனுப்புகிறார். இந்தக் கடிதத்தில் தான் மட்டும் எழுதுவதாகக் கூறாமல், தீமோத்தேயு, சீலா இருவர் பெயர்களையும் சேர்த்துக்கொண்டு அவர்களுக்கும் முக்கியத்துவத்தைக் கொடுக்கிறார் (1 தெச. 1:1). கொரிந்து

பட்டணத்தில் தொடர்ந்து தங்கியிருக்கும்போது, இந்த மூவரின் பெயரில் பவுல் அப்போஸ்தலன் தெசலோனிக்கே சபைக்குத் தனது இரண்டாவது நிருபத்தையும் அனுப்புகிறார் (2 தெச. 1:1).

பவுல் அப்போஸ்தலன் தனது மூன்றாவது பயணத்தின் போது எபேசு பட்டணத்தில் தங்கியிருக்கும் வேளையில் கொரிந்து சபையில் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தீமோத்தேயுவை அங்கு அனுப்பினார் (1 கொரி. 4:17; 16:10). "எனக்குப் பிரியமும், கர்த்தருக்குள் உண்மையுமுள்ள என் குமாரனாகிய தீமோத்தேயு" (1 கொரி. 4:17) என்று பவுல் அப்போஸ்தலன் குறிப்பிட்டுள்ளார்.

ரோம சாம்ராஜ்யத்தில் ரோம், அலெச்சாந்திரா பட்டணங்களுக்குப் பிறகு கொரிந்து மூன்றாவது பெரிய நகராக இருந்தது. காமதேவதையின் கோவில் இங்கு இருந்தபடியால், நகரில் தேவதாசிகளின் எண்ணிக்கை அதிகமாகக் காணப் பட்டது. நகரத்தில் மட்டுமின்றி கொரிந்து சபையிலும்கூட ஒழுக்கக்கேடு நிலவியது (1 கொரி. 5: 1–5; 6: 15–20). சபையும் வாக்குவாதங்களால் பிளவுபட்டிருந்தது. ஒருவர்மேலொருவர் அரசு நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்ந்திருந்தனர். பவுல் அப்போஸ்தலனின் அதிகாரத்தைக்கூட எதிர்க்கும் நிலை இருந்தது!

சிறு வயதுமுதலே பக்தியில் வளர்க்கப்பட்டிருந்த தீமோத்தேயுவுக்கு கொரிந்து சபையின் இழிவான நிலை அதிர்ச்சியை அளித்திருக்க வேண்டும்! அவிசுவாசம் — அவரால் மாற்ற முடியும்! அன்புக் குறைவு — அவரால் சரிப் படுத்த முடியும்!, ஆனால் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்ளும், தாங்கள் செய்யும் அக்கிரமங்களை நியாயப்படுத்தும் சுயநீதிக்காரர்களை இளைஞன் தீமோத்தேயு வால் ஒன்றுமே செய்ய முடியவில்லை! அவருக்குக் கொடுக்கப் பட்ட இந்தப் பணி தோல்வியுற்றதற்கு முக்கிய காரணம் உலகத்தாரின் மாய்மாலங்களையும், அக்கிரமங்களையும்

இதுவரை நேருக்கு நேர் சந்திக்க அவருக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை என்று கூறலாம்.

எனினும் திரும்பிவந்த தீமோத்தேயுவை பவுல் அப்போஸ்தலன் அப்படியே விட்டுவிடவில்லை! உற்சாகமூட்டி, அவருடன் எரஸ்துவையும் சேர்த்து மக்கெதோனியாவுக்கு அனுப்பினார் (அப். 19:22). சபை கண்காணிப்புப் பணிகளையே செய்துவந்த தீமோத்தேயுவுக்கு முதன்முறையாக வெளி இடங்களில் நற்செய்தி பகரும் வாய்ப்புக் கிடைக்கிறது!

பவுல் அப்போஸ்தலன் மீண்டும் மக்கெதோனியாவுக்கு வந்து தீமோத்தேயு மற்றும் பிற ஊழியர்களுக்கு உற்சாகமளித்தார் (அப். 20:1,2). கொரிந்து சபை பிரச்சினையில் தோல்வியுற்றிருந்த தீமோத்தேயுவை ஊக்கப்படுத்தும் வண்ணமாக, பவுல் அப்போஸ்தலன் இங்கிருந்து கொரிந்து சபைக்கு எழுதிய இரண்டாவது நிருபத்தில் தன் பெயரோடு தீமோத்தேயுவின் பெயரையும் சேர்த்துக் கொள்கிறார் (2 கொரி. 1:1). சோர்வுற்றிருக்கும் துணை ஊழியர்களை உற்சாகப்படுத்தும் பணியில் அப்போஸ்தலர்கள் அனைவரும் ஈடுபட்டிருந்ததினால் தான், துணை ஊழியர்கள் பெரிய ஊழியர்களாக பலப்பட்டு, சபையை வளர்க்க முடிந்தது!

அடுத்த குளிர்காலத்தின்போது பவுல் அப்போஸ்தலன் கொரிந்துவில் இருந்தபடி, ரோம சபையினருக்கு எழுதிய நிருபத்தில் தீமோத்தேயுவை தனது "உடன் வேலையாள்" என்று குறிப்பிட்டுள்ளார் (ரோமர் 16:21).

பவுல் அப்போஸ்தலனின் இறுதி நாட்கள்

பவுல் அப்போஸ்தலன் எருசலேமுக்கு இறுதி முறையாகச் சென்றபோது தீமோத்தேயுவும் அவருடன் சென்றார் (அப். 20:4).

பவுல் அப்போஸ்தலன் முதன்முறையாக ரோமபுரியில் சிறைப்பட்டிருக்கும்போது தீமோத்தேயுவும் அவருடன் இருந்தார் (பிலி. 2:19, 20).



தீமோத்தேயு ஊழியம் செய்த
எபேசுவிலிருந்த ஆலயத்தின் இடிபாடுகள்

பிலிப்பியர் (பிலி. 1:1), கொலோசெயர் (கொலோ. 1:1), பிலமோன் (பிலே.1) இவர்களுக்கு பவுல் அப்போஸ்தலன் நிருபங்களை எழுதும்போது, தீமோத்தேயு அவருக்கு உதவியாக இருந்தார்.

பவுல் அப்போஸ்தலனின் முதலாவது சிறை வாசத்துக்குப் பின்னர் தீமோத்தேயு எபேசு சபையில் ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது பவுல் அப்போஸ்தலன் மக்கெதொனியாவிலிருந்து அவருக்குத் தனது நிருபத்தை எழுதினார். இந்த நிருபத்தில் பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுவை "விசுவாசத்தில் உத்தம குமாரன்" (1 தீமோ. 1:2), "குமாரனாகிய தீமோத்தேயுவே" (1:18) என்றழைத்து, அவர்மீதான தனது அன்பை உறுதிப்படுத்தி அவருக்கு சபை நிர்வாகப் பணியில் நல்ல ஆலோசனைகளைக் கொடுக்கிறார். அவரிடம் ஒப்புவிக்கப்பட்ட பொறுப்பைக் காத்துக் கொள்ளும்படியும் (6:20) கேட்டுக் கொள்கிறார்.

பவுல் அப்போஸ்தலன் இரண்டாவதுமுறை ரோமாபுரியில் சிறையிலடைக்கப்பட்டபோது, அவர் தீமோத்தேயுவுக்குத் தனது இரண்டாவது நிருபத்தை எழுதினார். தீமோத்தேயுவைத் தன்னிடம் வரும்படி அழைத்தார் (2 தீமோ. 4:9,21). தீமோத்தேயு தனக்குப் பின்பு தனது பணியைத் தொடரத்தக்கவர் என்ற வகையில் பவுல் அப்போஸ்தலன் அவர்மீது வைத்திருந்த நம்பிக்கை இந்த நிருபத்தில் தெளிவாக வெளிப்பட்டுள்ளது. இந்த நிருபத்திலும் "உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்" (2 தீமோ. 1:14) என்ற தீமோத்தேயு தனது ஊழியத்தைக் காத்துக் கொள்ளும்படி அறிவுரை கொடுக்கிறார்.

பவுல் அப்போஸ்தலன் மரணத்தருவாயில் இருந்த போதிலும் (2 தீமோ. 4:6), பிகெல்லு, எர்மொகெனே (1:15), தோமா (4:10), அலெக்சந்தர் (4:14) இவர்களால் கைவிடப்பட்ட போதிலும், தீமோத்தேயுவின் மீது அவர் அன்பும், நம்பிக்கையும் தெரிவித்திருப்பது, இந்த இளைஞனின் உள்ளத்தில் வற்றாத

உற்சாகத்தை அளித்திருக்கும், இறுதிவரை அவருக்குத் தூண்டுதலாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை!

தீமோத்தேயுவின் இறுதி ஊழியம்

பவுல் அப்போஸ்தலனின் அழைப்பின்படி, அவர் மரிப்பதற்கு முன்பு தீமோத்தேயு அவரைச் சந்திக்கச் சென்றாரா என்பது தெரியவில்லை. அவர் பின்னர் கொரிந்து பட்டணத்தில் சிறைப்பிடிக்கப்பட்டிருந்தார் என்ற செய்தி கிடைத்துள்ளது. வேதாகமம் அவர் விடுதலையானதுபற்றித் தெரிவிக்கிறது (எபி. 13:23).

தீமோத்தேயு விடுதலை பெற்றபின்பு, அவரது துணையைக் கொண்டு, ரோமாபுரியில் சபையைப் புதுப்பிக்க பர்னபா விரும்பினார். ஆனால் தீமோத்தேயுவோ எபேசு சபையிலேயே தமக்குரிய அழைப்பு இருப்பதாக விசுவாசித்தார்.

பர்னபா சீப்புரு தீவுக்குத் திரும்பிய பின்னர், தீமோத்தேயு எபேசு சபையில் தனது பணியைத் தொடர்ந்தார். நீண்டகாலமாக அந்தச் சபையின் பேராயராக விளங்கினார்.

எபேசுவில் தியானாளுடைய கோவில் இருந்தது. கிறிஸ்தவர்களால் இந்தக் கோவிலின் மகத்துவம் அழிந்து விடும் என்ற எண்ணத்தில் துவக்கத்திலிருந்தே எதிர்ப்புக்கள் கிளம்பிக் கொண்டிருந்தன (அப். 19:23–41).

தீமோத்தேயு தொடர்ந்து இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க வேண்டியிருந்தது. என்றாலும் அவர் விக்கிரக ஆராதனையை எதிர்த்துப் போராடிக் கொண்டேயிருந்தார். கி.பி. 97இல் அவர் தியானாள் தேவி கோவிலுக்கருகே விக்கிர ஆராதனைக்கு விரோதமாகப் போதித்துக் கொண்டிருந்தபோது, கோவிலைச் சேர்ந்தவர்கள் அவர்மீது தடிகளையும், கற்களையும் வீசி அவரைக் கொன்றார்கள்.

பவுல் அப்போஸ்தலனால் சிறப்பான ஊழியத்திற்காகப் பக்குவப்படுத்தப்பட்ட தீமோத்தேயு, அவரைப்போலவே இரத்தச்சாட்சியாக மரித்தார்! நல்ல போராட்டத்தைப் போராடி முடித்துவிட்டார்!

8

லாசரு

கிறிஸ்துவால் உயிரோடு எழுப்பப்பட்டதின்மூலம் அழியாத பெயர் பெற்றவராக விளங்குகிறார் லாசரு. லாசரு என்பது எலியேசர் என்ற எபிரேயப் பெயரின் சுருக்கப் பதமாகும். "தேவன் உதவி செய்தார்" என்பது இதன் பொருளாகும். பெயருக்கேற்றபடி ஆண்டவர்மூலம் மகத்தான உதவியைப் பெற்றவராக, உயிரோடு எழுப்பப்பட்ட மிகச்சிலரில் அவரும் ஒருவராக விளங்குகிறார் லாசரு!

லாசருவின் இல்லம்

எருசலேம் நகருக்குத் தென் கிழக்கே இருந்த சிற்றூர் தான் பெத்தானியா. இங்கு லாசரு தனது சகோதரிகளான மார்த்தாள், மரியாள் இவர்களுடன் வசித்து வந்தார் (யோவான் 11:1). இவர்கள் மூவருமே கிறிஸ்துவால் நேசிக்கப்பட்டவர்கள் (யோவான் 11:5,36). இயேசு அந்தப் பகுதிக்கு வரும் போதெல்லாம் இவர்களுடைய இல்லத்தில் தங்கி ஓய்வெடுப்பது வழக்கம் (லூக்கா 10:38-41). அவர்களும் அவரை உபசரிப்பதில் மகிழ்ச்சியடைந்தார்கள்.

இவர்கள் வசதிபடைத்தவர்களாகவும் செல்வாக்குள்ளவர்களாகவும் விளங்கினார்கள். மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசுவதை (யோவான் 12:3) நாம் அறிகிறோம். இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்கலாம் (யோவான் 12:5) என்று யூதாஸ்காரியோத்து கூறுவதையும் படிக்கிறோம். இந்த நளதம்

பெத்தானியாவில் லாசரு
உயிரோடு எழுப்பப்பட்ட கல்லறை

இமயமலைப் பகுதியில் காணப்படும் ஒருவகைத் தாவரத்திலிருந்து தயாரிக்கப்பட்ட தைலமாகும்! இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விலையுயர்ந்த இந்தத் தைலத்தை வாங்கக் கூடியவர்களாக இருந்ததால் லாசருவின் குடும்பத்தினர் வசதி படைத்தவர்களாக இருந்திருக்க வேண்டும். லாசரு மரித்தபோது சகோதரிகளுக்கு ஆறுதல்கூற ஊரே திரண்டு வந்திருந்தபடியால் அவர்கள் செல்வாக்குள்ளவர்களாகவும் இருந்திருக்க வேண்டும்.

லாசருவின் இல்லத்தின் இடிபாடுகளின்மீது தற்போது ஓர் ஆலயம் கட்டப்பட்டுள்ளது!

லாசருவின் மரணமும், உயிரோடு எழுப்பப்படுதலும்

லாசரு எந்த வகையான நோய்வாய்ப்பட்டான் என்பது கூறப்படவில்லை என்றாலும் அவன் குணமடையாமல் இறந்து போய்விட்டான் (யோவான் 11:1–57).

லாசரு நோய்வாய்ப்பட்டிருக்கும்போது, அவனது சகோதரிகள் அதுபற்றி இயேசுவுக்குச் செய்தியனுப்பினார்கள். இயேசு வந்தால் லாசருவின் நோயைக் குணமாக்கி விடுவார் என்ற விசுவாசம் அவர்களுக்கு இருந்தது. ஆனாலும் அவரால் அவனை உயிரோடு எழுப்ப முடியும் என்ற விசுவாசம் அவர்களுக்கு இல்லை (யோவான் 11:24,39).

லாசரு வியாதியாயிருக்கிறான் என்பதைக் கேள்விப்பட்ட பின்பும் இயேசு உடனடியாக பெத்தானியாவுக்குப் புறப்படவில்லை! லாசருவை அவர் எவ்வளவாய்ச் சிநேகித்திருந்தபோதிலும் (யோவான் 11:35,36) அவர் பதற்றமடையவில்லை! ஏனென்றால் லாசரு மரித்துப்போனாலும் அது நிரந்தர மரணம் அல்ல என்று அவர் அறிந்திருந்தார். லாசரு மரணமடைந்து, அழிந்து போய்விடுவான் என்றே அவர் கூறவில்லை! "இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குகிறதற்கு ஏதுவாயிருக்கிறது; தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார்" (வச.4) என்றே கூறினார்!

தனது சீடர்களும் இந்த மகிமையை உணர்ந்து விசுவாசத்தில் பலப்பட வேண்டும் என்பதற்காக மேலும் இரண்டு நாள் அதே இடத்தில் தங்கினார் (வச. 6).

அப்போது லாசரு மரித்துப்போனதை அவர் உணர்கிறார் என்றாலும் "லாசரு நித்திரையடைந்திருக்கிறான் நான் அவனை எழுப்பப்போகிறேன்" (வச. 11) என்று முன்னறிவித்தார். லாசரு வியாதியாயிருக்கிறான் என்பதைச் சொல்லியனுப்பிய சகோதரிகள், அவன் மரித்துப்போன செய்தியைச் சொல்லியனுப்பவில்லை! லாசரு மரித்த பின்னர் இயேசுவால் என்ன செய்ய முடியும் என்று நினைத்து விட்டார்கள்!

இயேசுவை யூதர்கள் கல்லெறிந்து கொன்று விடுவார்களோ என்ற பயத்தோடு சீடர்கள் இருந்தார்கள் (வச. 8). மரித்த லாசருவை தான் உயிரோடு எழுப்பப் போகிறேன் என்று இயேசு வெளிப்படையாகக் கூறியபின்னரும் ஒருவருமே நம்பவில்லை! தோமா கூறுவதைக் கவனியுங்கள்: "அவரோடே கூட மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள் என்றான்" (வச. 16). இவரே மரிக்கப்போகிறார். இவர் எங்கே மரித்த லாசருவை உயிரோடு எழுப்பப் போகிறார் என்ற அவிசுவாசம் அவர்களுக்கு!

இவ்வாறு ஒருவருமே விசுவாசியாத நிலையில் இருக்கும்பொழுதுதான் அந்த உன்னதமான அதிசயம் நிகழ்ந்தது! விசுவாசத்தைப் பற்றிய அரிய போதனைகளை கிறிஸ்து அளிக்கும் வாய்ப்பும் கிடைத்தது!

"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" (வச. 25) என்ற கிறிஸ்துவின் வாக்குத்தத்தம் நமது விசுவாசத்திற்கே அஸ்திவாரமாக இருக்கிறது. லாசருவின் உயிர்த்தெழுதலை யல்ல, நித்திய ஜீவனையே கிறிஸ்து இங்கே வாக்குப் பண்ணுகிறார். இயேசு உலகத்தில் வருகிறவரான தேவ குமாரனாகிய கிறிஸ்து (வச. 27) என்ற சத்தியமே நற்செய்தியின் அடித்தளமாக இருக்கிறது.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]



பெத்தானியாவில் லாசருவின்
வீடு இருந்த இடத்தில் கட்டப்பட்டுள்ள ஆலயம்

ளெல்லாரும் கெட்டுப்போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்குமென்று நீங்கள் சிந்தியாமலிருக்கிறீர்கள் என்றான்" (யோவான் 11:50). சாத்தான் வேதம் ஓதுவதுபோல என்று கூறுவதைப் போன்று காய்பாவின் பேச்சு இருக்கிறது! மனுக்குலத்தின் மீட்புக்கான ஆண்டவரின் திட்டத்தை அப்படியே தன் வார்த்தைகளில் கூறிவிட்டார் காய்பா! ஜனங்களெல்லாரும் கெட்டுப் போகாதபடிக்கு (நித்திய அழிவைப் பெறாதபடிக்கு) ஒரே மனுஷன் (மனுஷ குமாரனாகிய கிறிஸ்து) மரிப்பது நமக்கு நலமாயிருக்கிறது! "ஜனங்களெல்லாரும்" என்று கூறும்போது யூத ஜனங்களுக்காக மட்டுமின்றி எல்லா ஜனங்களுக்காகவும் மரிக்கப் போகிறார் (யோவான் 11:52) என்பதையும் கூட அவர் வெளிப்படுத்தி விட்டார்!

ஆலோசனைச் சங்கத்தின் இந்த முடிவுக்குப் பின்பு அவர்கள் இயேசுவை மட்டுமல்ல லாசருவையும் (யோவான் 12:11) கொலைசெய்ய வகை தேடினார்கள்!

வேதாகமத்தில் லாசருவைப் பற்றி மேலும் எந்தச் செய்தியும் கூறப்படவில்லை.

லாசருவின் பிற்கால ஊழியம்

யூதர்கள் தொடர்ந்து லாசருவைக் கொலை செய்ய முயன்றபடியால் கி.பி. 60–ல் லாசரு எருசலேமை விட்டு சீப்புரு தீவுக்குத் தப்பியோடினார். அங்கு கித்தியம் என்ற ஊரில் தனது ஊழியத்தத் துவங்கி சபையை நிறுவினார். இங்கு லாசரு 30 வருடங்கள் பேராயராகப் பணிபுரிந்தார் என்று கூறப்படுகிறது!

லாசரு எருசலேமிலிருந்து வெளியேற்றப்பட்டதைப் பற்றி மற்றொரு செய்தியும் கூறப்படுகிறது.

யூதர்கள் லாசரு, மரியாள், மார்த்தாள், பணிப்பெண் மார்செல்லா, 72 சீடர்களில் ஒருவரான மேக்சிமின் இவர்களைப் பிடித்து, துடுப்புக்களோ, பாய்மரமோ இல்லாத படகு ஒன்றில்

ஏற்றி, கடலில் விட்டுவிட்டார்களாம். ஆனால் அதிசயிக்கத்தக்க விதமாக நூற்றுக்கணக்கான மைல்கள் கடலில் நகர்ந்துசென்ற படகு தற்போது பிரான்ஸ் நாட்டிலுள்ள மார்செயில்ஸின் அருகே தரை தட்டியது. இந்த அதிசயத்தைக் கண்ட அநேகர் விசுவாசிகளானார்கள்.

மார்செயில்ஸில் சபையை நிறுவிய லாசரு அங்கு ஏழு ஆண்டுகள் பேராயராகப் பணிபுரிந்தார். லாசரு தங்கியிருந்ததாகக் கருதப்படும் முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த குகை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவர் கட்டிய ஆலயத்தின் இடிபாடுகளின் மீதே தற்போதைய பேராலயம் கட்டப்பட்டுள்ளது எனப்படுகிறது.

மேக்சிமின் எயிக்ஸ் பகுதியில் பேராயராகப் பணி புரிந்தார்! மரியாள் அந்தப் பகுதியிலிருந்த மலை ஒன்றின்மீது பெண் ஊழியராகச் சேவை செய்து மரித்தார். மார்த்தாள் பெண்களுக்கான மடம் ஒன்றை நிறுவி, அவர்களுக்கு ஊழியம் செய்து, டாராஸ்கான் என்ற ஊரில் மரித்தார்.

லாசரு சீப்புரு தீவிலுள்ள கித்தியம் என்ற ஊரில் மரித்தார். அங்கு அவருடைய கல்லறை காணப்படுகிறது. எனவே அவர் கித்தியம், மார்செயில்ஸ் என்ற இரு இடங்களிலும் ஊழியம் செய்திருக்கக் கூடும் என்பது உறுதியாகிறது.

கி.பி. 890–ல் பைசாண்டிய பேரரசராக இருந்த லியோ லாசருவின் எலும்புகளை கான்ஸ்டான்டிநோபில் நகருக்கு எடுத்துச் சென்றார்.

அதே நூற்றாண்டில் அவரது எலும்புகள் மார்செயில்சுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்குள்ள ஆலயத்தில் வைக்கப்பட்டன.

பெத்தானியாவில் லாசருவின் முதல் கல்லறை இருந்த இடத்தில் ஓர் ஆலயமும், மடமும் கட்டப்பட்டுள்ளன! கல்லறையும் அப்படியே பாதுகாக்கப்பட்டுள்ளது.

“என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்” (யோவான் 11:25).

9

தீத்து

"பொதுவான விசுவாசத்தின்படி உத்தம குமாரனாகிய தீத்து" (தீத்து 1:1) என்று பவுல் அப்போஸ்தலனால் அழைக்கப்பட்ட சிறப்பைப் பெற்றவர் இவர். தீத்து என்ற பெயருக்கு 'கனவான்' என்பது பொருளாகும்.

இவர் சீரியா நாட்டின் அந்தியோகியா பட்டணத்தைச் சேர்ந்த ஒரு கிரேக்கர் (கலா. 2:3). இவர் லூக்காவின் சகோதரர் என்று நம்பப்படுகிறது.

அந்தியோகியா பகுதியில் பவுல் அப்போஸ்தலனின் ஊழியத்தின் காரணமாக அநேக புறஜாதியார் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள். தீத்துவும் அவர்களில் ஒருவர்.

தீத்துவும் பவுல் அப்போஸ்தலனும்

தீமோத்தேயுவைப்போல தீத்துவும் பவுல் அப்போஸ்தலனுக்கு நெருங்கிய உடன் ஊழியராகப் பணியாற்றியவர்.

அந்தியோகியா சபையில் புறஜாதிக் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை பெருகி வருவதைக் கண்ட எருசலேம் சபை யூதக் கிறிஸ்தவர்களில் சிலர் எல்லா புறஜாதிக் கிறிஸ்தவர்களும் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டுமென்று வற்புறுத்தத் துவங்கினார்கள்.

கி.பி. 45–இல், பர்னபாவும் பவுல் அப்போஸ்தலனும் தீத்துவும் எருசலேமுக்கு வந்தபோது, இந்தப் பிரச்சினை

வலுப்பெற்றது. தீத்து கிரேக்கராக இருந்தபோதிலும் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும் என்ற விவாதம் எழுந்தது (கலா. 2:4). ஆனால் பவுல் அப்போஸ்தலனோ கண்டிப்பாக இருந்து தீத்து விருத்தசேதனம் பண்ணக் கட்டாயப்படாமல் இருக்கும்படி பார்த்துக் கொண்டார். "கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதன மில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது. அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்" (கலா. 5:6) என்றும் "கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை; விருத்த சேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; புது சிருஷ்டியே காரியம்" (கலா. 6:15) என்றும் கூறி விவாதித்தார். இறுதியில் பவுல் அப்போஸ்தலன் விருத்தசேதனம் இல்லாத புறஜாதியாருக்கு ஊழியம் செய்ய அழைக்கப்பட்டிருக்கிறார் என்பதை உணர்ந்த போது, எருசலேம் சபையின் தூண்களாக எண்ணப்பட்ட இயேசுவின் சகோதரன் யாக்கோபுவும், பேதுருவும், யோவானும் விருத்தசேதனம் பண்ணப்படுவது தேவையல்ல என்ற முடிவுக்கு வந்தார்கள் (கலா. 2:9). துவக்க காலச் சபை பிளவுபடக்கூடிய அளவுக்கு பெரிதாகிக் கொண்டுவந்த இந்தப் பிரச்சினைக்கு இத்துடன் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

என்றாலும் தீத்து போன்ற புறஜாதியாருக்கு எதிரான குறைகூறுதலும், எதிர்ப்புக்களும் முற்றிலும் நீங்கிவிடவில்லை. இளவயதினராகிய தீத்து இந்தப் பிரச்சினைகளின் நடுவே கிறிஸ்துவுக்காக உறுதியாக நின்றபடியால் இறுதி வெற்றியைப் பெற்றார்.

தீத்துவும் கொரிந்து சபையும்

கி.பி. 50–ல் பவுல் அப்போஸ்தலன் தனது இரண்டாவது அருட்பயணத்தின்போது கிரேக்க தேசத்திலிருந்த கொரிந்து பட்டணத்தில் சபையை நிறுவினார் (அப். 18:1–18).

கொரிந்து பட்டணம் ரோமாபுரி, அலெக்சாந்திரியா பட்டணத்துக்கு அடுத்தபடியாக ரோம சாம்ராஜ்யத்திலேயே

பெரிய நகராக இருந்தது. இங்கிருந்த காம தேவதையின் கோவிலில் தேவ தாசி முறை நிலவிவந்தது. எனவே பட்டணமெங்கும் ஒழுக்கக் கேடுகள் அதிகரித்தன.

கொரிந்து சபையிலும் இந்தச் சீர்கேடுகள் ஊடுருவி யிருந்தன (1 கொரி. 1:1–5; 6:15–20). இது மட்டுமின்றி மனக் கசப்புக்களினால் சபை பிளவுபட்டிருந்தது. ஒருவருக்கொருவர் விரோதமாக நாட்டின் நீதிமன்றத்தில் வழக்காடி வந்தனர் (1 கொரி. 6:1). விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிப்பது பற்றியும் கருத்து வேறுபாடுகள் நிலவின (1 கொரி. 8:1). இறுதியாக பவுல் அப்போஸ்தலனின் அதிகாரத்துக்கும், ஊழியத்துக்கும் எதிராகக்கூட கேள்விகளை எழுப்பினார்கள் (1 கொரி. 9 அதி.)

பவுல் அப்போஸ்தலனின் பிற ஊழியங்களுக்கு இடறலாக விளங்கிய இந்தச் சபையை அவர் சீர்ப்படுத்த விரும்பினார். தீமோத்தேயுவை இந்தப் பணிக்காக கொரிந்து சபைக்கு அனுப்பினார் (1 கொரி. 4:17). ஆனால் அவரால் சமாளிக்க முடியாத அளவுக்குப் பிரச்சினைகள் பெருகியிருந்தன!

இவ்வேளையில்தான் தீத்து அங்கே அனுப்பப்பட்டார். கிறிஸ்துவின் அதிகாரத்துக்குக் கீழாக அந்தச் சபையைக் கொண்டு வரவேண்டும் என்பதும், அவர்கள் தங்கள் பாவங்களுக்காக மீண்டும் மனந்திரும்பும்படி செய்ய வேண்டும் என்பதுவும் தீத்துவுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புகளாகும். பெரிய பொறுப்புகள்தான்! தீத்து இதற்காக என்ன செய்தார் என்று கொடுக்கப்படவில்லை. ஆனால் அவரது விசுவாச முயற்சியின் விளைவுகளை நாம் அறிகிறோம். கொரிந்து சபையினரைப் பவுல் அப்போஸ்தலனின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதில் வெற்றி பெற்றார்! அதன் பிறகு அச் சபையினர் என்றுமே அவருக்கு எதிர்த்து நிற்கவில்லை! தங்கள் பாவங்களுக்காகத் துக்கப்பட்டு மறுபடியுமாக மனந் திரும்பினார்கள் (2 கொரி. 7:9,10).

இந்த வெற்றியை பவுல் அப்போஸ்தலனிடம் வந்து மகிழ்ச்சியோடு அறிவித்தார் தீத்து! "இதினிமித்தம் நீங்கள் ஆறுதலடைந்ததினாலே நாங்களும் ஆறுதலடைந்தோம்; விசேஷமாகத் தீத்துவினுடைய ஆவி உங்கள் அனைவராலும் ஆறுதலடைந்ததினாலே, அவனுக்கு உண்டான சந்தோஷத்தினால் அதிக சந்தோஷப்பட்டோம்" (2 கொரி. 7:13) என்று பவுல் அப்போஸ்தலன் குறிப்பிட்டுள்ளார்! சபையைச் சீர்திருத்தும் ஆலோசனைப் பணியில் வெற்றியடைந்துவிட்டார் தீத்து!

கிரேத்தா தீவில் தீத்து!

கொரிந்து சபையினரைச் சீர்திருத்தும் பணியில் வெற்றி பெற்ற தீத்துவுக்கு, மேலும் பொறுப்புள்ள பணியைக் கொடுக்கத் தீர்மானித்தார் பவுல் அப்போஸ்தலன்!

மத்தியதரைக் கடலிலிருக்கும் கிரேத்தா தீவில் அநேக சபைகள் இருந்தன. ஆனால் இவை ஒழுங்கான அமைப்பையும், வளர்ச்சியையும் பெறாமல் சிதறிக்கிடந்தன. "குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும், நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, பட்டணங்கள்தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும், உன்னைக் கிரேத்தா தீவிலே விட்டு வந்தேனே" என்று (தீத்து 1:5) தீத்துவுக்கு அளிக்கப்பட்ட பொறுப்பைப் பற்றி பவுல் அப்போஸ்தலன் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் இது எளிதான பொறுப்பல்ல! ஏனென்றால் அங்கே "அநேகர், விசேஷமாய் விருத்தசேதனமுள்ளவர்கள், அடங்காதவர்களும், வீண்பேச்சுக்காரரும், மனதை மயக்குகிறவர்களுமாயிருக்கிறார்கள். அவர்களுடைய வாயை அடக்கவேண்டும்; அவர்கள் இழிவான ஆதாயத்துக்காகத் தகாதவைகளை உபதேசித்து, முழுக் குடும்பங்களையும் கவிழ்த்துப் போடுகிறார்கள்" (தீத்து 1:10,11). இவ்வாறு சபைக்கு விரோதமாக யூதர்களின் எதிர்ப்பும் இருந்தது!

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

அவரது கிருபையை எதிர்த்தும், தாழ்மைக்கு முன்பாகவும் போலித் தலைவர்கள் ஒன்றுமே செய்ய முடியவில்லை! தீத்துவின் அமைதியான பேச்சைக் கேட்ட அவர்கள், தீத்து அதிகாரம் செலுத்த வரவில்லை என்பதையும், சபையாரை ஆண்டவருக்கு நேராகத் திருப்பவே முயற்சி செய்கிறார் என்பதையும் படிப்படியாகப் புரிந்து கொண்டார்கள். கொஞ்சம் கொஞ்சமாகத் தங்கள் பிடிவாதங்களைக் கைவிட்டு கர்த்தரிடம் திரும்பினார்கள். தீத்து, தன்னையல்ல, கர்த்தரையே மகிமைப்படுத்தியதினால், சபைகளின் உட்பூசல்கள் நீங்கின! ஒன்றுபட்ட சபையார் சபைக்கு வெளியேயிருந்து வந்த இருமுனைத் தாக்குதல்களையும் சமாளித்து சபைகளை விஸ்தரிக்க முடிந்தது!

பவுல் அப்போஸ்தலனின் நிருபம்

இவ்வாறு தீத்து கிரேத்தா தீவுச் சபைகளை ஒன்று படுத்திக்கொண்டிருக்கும் வேளையில் பவுல் அப்போஸ்தலன் ஒரு நிருபத்தின்மூலம் அவருக்கு நல்ல ஆலோசனைகளைக் கூறுகிறார். கி.பி. 64இல் ரோமாபுரியிலிருந்து இந்த நிருபம் தீத்துவுக்கு அனுப்பப்பட்டது.

தனது இறுதிநாட்கள் நெருங்கிவிட்டதை உணர்ந்த பவுல் அப்போஸ்தலன் தனக்குப் பின்னால் தனது பணியைத் தொடரும்படி, தன்னால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிற்சி அளிக்கப் பெற்ற தீமோத்தேயு, தீத்து இருவருக்குமே தனித்தனியே நிருபங்களை எழுதுகிறார். தனது அனுபவங்களைக் கொண்டும், தேவ வழிநடத்துதலின் மூலமும், சபைகளை நிர்வகிப்பது எப்படி என்பதை தெளிவாக இந்த நிருபங்களின் மூலம் அவர் விளக்கியுள்ளார். தீத்துவுக்கு எழுதப்பட்ட நிருபத்தில் சபை நிர்வாகத்தைப் பற்றியும் (1:1–16), சபை உறுப்பினர்களின் நடத்தை பற்றியும் (2:1–3,8) தீத்து கவனிக்க வேண்டிய காரியங்களைச் சுட்டிக்காட்டுகிறார். தீத்து 3:9–15 வசனங்களில்

ஒரு ஞானத் தகப்பனாரைப்போல தீத்துவுக்கு நல்ல ஆலோசனைகளையும் அளிக்கிறார் பவுல் அப்போஸ்தலன்!

தீத்துவின் பிற்கால ஊழியம்

பவுல் அப்போஸ்தலன் தனது நிருபத்தில் தீத்து தன்னை மாரிக் காலத்தில் நிக்கொப்போலியில் சந்திக்கும்படி அவருக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார் (தீத்து 3:12). ஆனால் பவுல் அப்போஸ்தலன் இரத்தச்சாட்சியாக மரிக்கும் வரை தீத்து மறுபடியும் அவரைச் சந்தித்தது பற்றிய செய்திகள் ஒன்றும் கிடைக்கவில்லை!

பவுல் அப்போஸ்தலனைப்போல "ஒரே ஆவியை உடையவரும், ஒரே அடிச்சுவடுகளில் நடந்தவருமான" (2 கொரி. 12:18) தீத்து பவுல் அப்போஸ்தலனின் மரணத்திற்குப் பிறகு அவர் தனக்காகப் பொறுப்பேற்குமாறு அளித்த கிரேத்தா தீவுச் சபைகளைக் கண்காணிப்பதிலேயே தனது எஞ்சிய வாழ்நாளைக் கழித்தார். திருமணம் செய்து கொள்ளாமல் சபைப் பணிகளிலேயே தன்னை ஈடுபடுத்திக் கொண்ட தீத்து, கிரேத்தா தீவுச் சபைகளின் பேராயராகச் சேவை செய்து வயது சென்ற பின்னர் மரித்தார்!

எவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமோ அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்ததினாலேயே தீத்து சபை ஆலோசகராகரும், சபைத் தலைவராகவும் விளங்க முடிந்தது. அவர் சுய பெருமையை நாடவில்லை (2 கொரி. 12:18). கிறிஸ்துவுக்கும், சபைக்கும் ஊழியம் செய்வதையே நாடினார்! இதனால் ஆண்டவரால் மேலான நிலைக்கு உயர்த்தப்பட்டார்!

கிறிஸ்துவுக்காக மரித்த புதிய ஏற்பாட்டு பக்தர்கள்

☐ இயேசுவானவரால் உயிரோடு எழுப்பப்பட்ட லாசரு பிறகு என்ன செய்தார்?

☐ இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபு எப்படி இரத்தச்சாட்சியாக மரித்தார்?

☐ பர்னபா இறுதி நாட்களில் எங்கே ஊழியம் செய்தார்?

☐ மாற்கு எங்கே, எப்படி வல்லமையாக ஊழியம் செய்து மரித்தார்?

☐ தீமோத்தேயு, தீத்து இருவரும் எவ்வாறு பவுல் அப்போஸ்தலனின் ஊழியத்தைத் தொடர்ந்தார்கள்?

ஸ்தேவான், இயேசுவின் சகோதரராகிய யாக்கோபு, பர்னபா, லூக்கா, மாற்கு, பிலிப்பு, தீமோத்தேயு, லாசரு, தீத்து இவர்களின் மனமாற்றம், ஊழியம், இரத்தச்சாட்சி மரணம் பற்றிய ஆதாரபூர்வமான செய்திகள், சரித்திரச் சான்று கொண்ட புகைப்படங்களுடன் கொடுக்கப்பட்டுள்ளன!

மாறிவரும் இன்றைய சூழ்நிலைகளுக்கு ஏற்ப நமது விசுவாசத்தைப் பலப்படுத்தி, கிறிஸ்துவுக்காகத் துணிவுடன் நிற்கும் வல்லமையை நமக்குக் கொடுக்கக்கூடிய அற்புதமான நூல்!

விலை ரூ. 12–00

இரத்தச்சாட்சிகள் நூல்வரிசை
சிறுவர் / வாலிபர் / பெரியோர்